
இலங்கை மத்திய வங்கி
தகவல் திணைக்களம்

# குறிப்பேடு

23 மலர் 10 இதழ் 2004 ஒக்டோபர்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்




# இலங்கையின் பொருளாதாரம்

**2003 மத்திய வங்கி ஆண்டறிக்கையை அடிப்படையாகக் கொண்டது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாணய** விதிச்சட்டத்தின்படி இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரில் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆண்டறிக்கையை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக நிதி அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் சட்ட ரீதியானதொரு தேவையாகும்.

- ஒட்டுமொத்தமான பொருளாதார நிலைமை
- இலங்கை மத்திய வங்கியின் நிலைமை
- மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளும் செயற்பாடுகளும்.

2003 ஆம் ஆண்டில் 54 வது ஆண்டறிக்கையே சமர்ப்பிக்கப்பட்டது

2003 ஆம் ஆண்டறிக்கையானது 4 பிரதானமான பகுதிகளையும் புள்ளிவிபரப் பின்னிணைப்பையும் அதேபோன்று 23 சிறப்புக் குறிப்புக்களையும் கொண்டுள்ளது. பிரதானமான நான்கு பகுதிகளிலும் முதற் பகுதியானது பொருளாதாரச் செயலாற்றம், தோற்றப்பாடு, விடயங்களும், கொள்கைகளும் ஆகியவற்றின் கலந்துரையாடலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியானது இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் மற்றும் தொழிற்பாடுகளின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது பகுதியானது முக்கிய நிருவாக நடவடிக்கைகள், அறிவுரைகள், கட்டளைகள் மற்றும் அறிவித்தல்களின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. நான்காவது பகுதியானது 2003 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட நிதியியல் துறையுடன் தொடர்புடைய முதன்மைச் சட்டவாக்கங்களைக் கொண்டுள்ளது. புள்ளிவிபரப் பின்னிணைப்பில் 139 புள்ளிவிபர அட்டவணைகள் உள்ளனவென்பதோடு, சிறப்புப் புள்ளிவிபரப் பின்னிணைப்பொன்றின் மூலம் 50 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்துக்கான பல சமூக, பொருளாதாரத் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பொருளியல் பகுப்பாய்வாளர்கள், முதலீட்டாளர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு மேலதிகமாக இவ் ஆண்டறிக்கையைப் பெரும்பாலும் உயர் தரப் பரீட்சை மற்றும் ஏனைய உயர் பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றவர்களே பரிசீலிக்கின்றனர். அவர்களுக்காக விசேட கவனத்துடன் எழுதப்படுகின்ற இச் சிறப்பு இதழில் 6 பிரதானமான உப தலைப்புகளின் கீழ் விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. இலங்கையின் பேரண்டப் பொருளாதாரச் செயற்பாடுகளும் பொருளாதார வளர்ச்சிப் போக்குகளும்.
2. இலங்கையின் அரச பொருளாதாரத் தொழிற்பாடுகள்.
3. நாணயம், வங்கிகள் மற்றும் விலை மட்டம்.
4. சர்வதேச வர்த்தகம்.
5. சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டு நிதியியல் எண்ணக்கருக்கள்.
6. இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகள், கொள்கைகள் மற்றும் சமூகச் சுட்டெண்கள்.


# குறிப்பேடு

ISBN 1391-3697

2004 ஒக்டோபர்

ஒரு பிரதியின் விலை : ரூபா 10.00
வருடாந்த சந்தா : ரூபா 240.00
(தபாற் கட்டணத்துடன்)

தகவல் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி எனப் பெயரிடப்பட்ட காசுக்கட்டளைகள்/காசோலைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் "குறிப்பேடு" சஞ்சிகையை மாதாந்தம் அஞ்சலில் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
தகவல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
த.பெ. இல. 590, கொழும்பு


கட்டுரைகள் பக்கம்


2003 மத்திய வங்கி ஆண்டறிக்கையின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரம்

1. 2003 இல் பொருளாதார வளர்ச்சி வேகமும், இலங்கையின் பேரண்டப் பொருளாதாரச் செற்பாடுகளும் 3
2. இலங்கையின் அரச பொருளாதாரத் தொழிற்பாடுகள் 7
3. இலங்கையின் நிதியியல் துறை 11
4. சர்வதேச வர்த்தகம் 15
5. சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டு நிதியியல் எண்ணக்கருக்கள் 17


அட்டை அலங்காரம்: ஸ்ரீ தர்ஷன நாரன்பனாவ

**"குறிப்பேடு"** சஞ்சிகையில் இடம்பெறும் கருத்துக்கள் கட்டுரை ஆசிரியரின் கருத்துக்களேயொழிய இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாகாதிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2003 இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையின் அடிப்படையில்

# இலங்கையின் பொருளாதாரம் 2003

**வின்சன்ற் மர்வின் பர்னாந்து**
**மேலதிகப் பணிப்பாளர்**
***பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்***

## 1

## 2003 இல் பொருளாதார வளர்ச்சி வேகமும் இலங்கையின் பேரண்டப் பொருளாதாரச் செயற்பாடுகளும்

2003 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி (GDP) 5.9% வீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2002 ஆம் ஆண்டின் 4% வீத வளர்ச்சி மற்றும் 2001 ஆம் ஆண்டின் ~ 1.5% வீத வீழ்ச்சியின் முன்னிலையில் இது குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியாகும். மேலும் இது 1990 ~ 99 வரையிலான தசாப்தத்தின் சராசரி பொருளாதார வளர்ச்சி வேகமான 5.1% வீதத்துடனும் 1980 ~ 89 வரையிலான தசாப்தத்தின் 4.2% வீதத்துடனும் ஒப்பிடப்படுகின்ற போது மிகவும் உயர் வளர்ச்சி வேகமாகும். இவ் உயர் வளர்ச்சி வேகத்துக்குப் பல காரணிகள் ஏதுவாயமைந்துள்ளன.

- யுத்த நிறுத்தமும் சமாதானச் செயற்பாடும் தொடர்ந்து அமுலிலிருப்பதன் காரணமாக பண்டங்கள் ,சேவைகள் , தொழில் காரணிகள் சுதந்திரமாக இயங்குவதற்கு வாய்ப்புக்கிடைத்தமை.
- மத்திய வங்கியின் முன்னெச்சரிக்கையுடன் கூடிய நிதியியல் கொள்கையின் காரணமாக வட்டி வீதம் குறைவடைந்தமை, செலாவணி வீதம் நிலையாயிருந்தமை, மற்றும் பணவீக்கம் குறைவடைந்தமை.
- மிகவும் சிறந்த அரச நிதியியல் ஒழுக்கம்.
- உள்ளமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்கள் உள்ளடங்கிய சிறப்பான பேரண்டப் பொருளாதார முகாமைத்துவம்.
- ஒப்பீட்டளவில் சிறந்த காலநிலை நிலவியமை
- மின்சார வழங்கல் ஆண்டு பூராவும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டமை.
- சர்வதேசப் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம்.

**ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடுதல்**

பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் உற்பத்தி ஆற்றலின் தொடர்ச்சியான அதிகரிப்பாகும். இது காரணிச் சேவைகளின் அளவு அதிகரித்தல், காரணி விளைவுத்திறன் அதிகரித்தல் ஆகிய விடயங்களின் மூலம் நடைபெறுகின்ற நீண்டகாலச் செயற்பாடாகும். பொருளாதார வளர்ச்சியானது பெரும்பாலும் தேசிய உற்பத்திப் புள்ளிவிபரங்களின் அடிப்படையிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றது. ஏதேனுமொரு கால கட்டத்தினுள் பொருளாதாரச் செயலாற்றுகையை மதிப்பிடுகின்ற போது, பிரதானமான அளவு கோலாக மொத்த உள்நாட்டு மற்றும் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியே பயன்படுத்தப்படுகின்றது. இங்கு விலைகளின் மாற்றங்கள் நீக்கப்பட்ட, அதாவது பணவீக்கத் தாக்கங்களுக்கு சீர்செய்யப்பட்ட உண்மை மொத்த உள்நாட்டு அல்லது தேசிய உற்பத்தியின் வளர்ச்சியே கவனத்திற் கொள்ளப்படுகின்றது. நடைமுறைக் காரணிச் செலவின விலைகளுக்கிணங்கக் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு, தேசிய உற்பத்தியைக் குறித்த விலைச் சுட்டெண்கள் மற்றும் குறித்த உற்பத்திச் சுட்டெண்களிலிருந்து மதிப்பிறக்கம் செய்வதன் மூலமே உண்மை உள்நாட்டு, தேசிய உற்பத்திகள் கணிக்கப்படுகின்றன. (கவனிக்கவும்: குறிப்பிட்ட விலைச் சுட்டெண்ணால் பகுப்பதன் மூலம் அல்ல). இங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தி (GNP) ஆகிய இரண்டு எண்ணக்கருக்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை இனங்காணுதல் முக்கியமானதாகும். **மொத்த உள்நாட்டு உற்பத்தி** என்பது, ஏதேனுமொரு குறிப்பிட்ட நாட்டின் எல்லையினுள் அல்லது புவியியல் பிரதேசத்தினுள் (உதாரணமாக~ இலங்கையில் இது ஆண்டுதோறும் அதேபோன்று மூன்று மாதத்திற்கு ஒரு தடவையும் கணிக்கப்படுகிறது) உருவாகும் உற்பத்திகளின் பெறுமதியாகும். (வெளியீட்டு முறையின் கீழ் இலங்கையில் உற்பத்திகளின் பெறுமதிக்காக சேர்மானப் பெறுமதியே பயன்படுத்தப்படுகிறது.)

**மொத்தத் தேசிய உற்பத்தி** என்பது, ஏதேனுமொரு குறிப்பிட்ட காலகட்டத்தினுள், நாட்டில் வதிபவர்களுக்குச் சொந்தமாயுள்ள வளங்களிலிருந்து உருவாகின்ற மொத்த உற்பத்திகளின் பெறுமதியாகும். இதன் பிரகாரம் மொத்தத் தேசிய உற்பத்தியானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டு தேறிய காரணி வருமானங்கள் கூட்டப்படுவதன் மூலமே கணிக்கப்படுகிறது. இதனை சந்தை விலையில், நடைமுறைக் காரணிச் செலவின விலையில், நிலையான காரணிச் செலவின விலையில் கணிக்கக்கூடியதாயுள்ளது. இங்கு சந்தை விலை என்பது, உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்காக நுகர்வோர் உண்மையிலேயே செலுத்துகின்ற விலையாகும். நடைமுறைச் சந்தை விலையிலிருந்து நடைமுறைக் காரணிச் செலவின் விலையைப் பெறுவதற்கு மறைமுக வரிகளைக் கழித்து, நிவாரணங்கள் கூட்டப்படுதல் வேண்டும். நடைமுறைக் காரணிச் செலவின் கீழ் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பில் இரண்டு விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஒன்று, உற்பத்தி அளவின் அதிகரிப்பாகும். மற்றையது, விலைகளின் அதிகரிப்பாகும். இவ் விலைகளின் அதிகரிப்பை நீக்குவதற்கு நடைமுறைக் காரணிச் செலவின விலையைக் குறிப்பிட்ட விலைச் சுட்டெண்களிலிருந்து மதிப்பிறக்கம் செய்தல் வேண்டும். மேலும் சில துறைகள் தொடர்பாக ஏற்புடைய உற்பத்திச் சுட்டெண்களும் பயன்படுத்தப்படுகின்றன. அப்போது ஏதேனுமொரு அடிப்படை ஆண்டின் விலையின் (1996 = 100) கீழ், அதாவது, நிலையான காரணி விலையின் கீழ் மொத்தத் தேசிய உற்பத்தியின் (உண்மைத் தேசிய உற்பத்தி) பெறுமதி பெறப்படுகின்றது. ஒரு நாட்டில் ஏதேனுமொரு ஆண்டினுள் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அளவிடுவதற்கு இந்த உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் மாற்றமுறும் நூற்று வீதமே பயன்படுத்தப்படுகிறது. இதற்காக உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் மாற்றமும் கவனத்திற் கொள்ளப்படலாம். 1977 ~ 2003 வரையிலான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் 1வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டில் நடைமுறைக் காரணி விலையின் படி மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 1561 பில்லியனாக இருந்ததோடு, சந்தை விலையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 1760 பில்லியனாக இருந்தது. நிலையான காரணி விலையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 929 பில்லியனாக இருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானத்தைச் சீர்செய்து பெறப்படுகின்ற நிலையான காரணி விலையின்படி மொத்தத் தேசிய உற்பத்தி (உண்மை மொத்தத் தேசிய உற்பத்தி) 2003 ஆம் ஆண்டில் 6.4% வீதத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைந்தது. 2002 ஆம் ஆண்டில் இவ்வளர்ச்சியானது 4.1% வீதமாக இருந்தது. உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியான 5.9% வீதத்துடன் ஒப்பிடுகின்றபோது உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் 6.4% வீத வளர்ச்சியானது வறலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். ஏனெனில், தொடர்ச்சியாக எதிர்க்கணியப் பெறுமதியை அறிக்கையிடுகின்ற வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானமானது செலவை விட வரவு அதிகரித்ததன் காரணத்தினால் 2003 ஆம் ஆண்டில் 2.6% வீதம் வளர்ச்சியைக் காட்டியது. நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகரித்து அதற்குக் கிடைத்த வட்டி அதிகரித்ததன் காரணமாக இந்நிலைமைஉருவாகியதைக் காணக்கூடிய தாயுள்ளது.

**இலங்கைப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளதும் வளர்ச்சியடையாதுள்ளதுமான துறைகள்**

1990 ~ 2003 வரையிலான காலகட்டத்தினுள் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளதும் வளர்ச்சியடையாதுள்ளதுமான துறைகள் புள்ளிவிபரக் குறிப்பு 2 இன் கீழ் காட்டப்பட்டுள்ளன. வளர்ச்சியடைந்த முக்கியமான துறைகளாக கைத்தொழில் மற்றும் பணிகள் துறையைக் காட்டக்கூடியதாயுள்ளது. 2003 இல் கைத்தொழில் துறை 5.5% வீதத்தாலும் பணிகள் துறை 7.7% வீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. இவ்விரு துறைகளும் 2001 ஆம் ஆண்டில் எதிர்க்கணிய நிலையை அறிக்கையிட்டன. 2002 ஆம் ஆண்டில் பணிகள் துறை 6% வீத உயர் வளர்ச்சியைக் காட்டியதோடு, கைத்தொழில் துறை 1% வீத அளவில் குறைந்த வளர்ச்சியைக் காட்டியது.

தனியொரு விடயமாக எடுத்துக்கொள்ளப் படுகின்றபோது 1990 இல் இருந்து இற்றைவரை உயர் வளர்ச்சியைக் காட்டிய விடயமாக தயாரிப்புத் தொழில், போக்கு வரத்து மற்றும் தொடர்பூட்டல், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், கட்டடவாக்கம், தேயிலை உற்பத்தி, நெல் உற்பத்தி மற்றும் மீன்பிடித் தொழில் என்பன உள்ளன. கடும் வீழ்ச்சிக்கு உள்ளான விடயமாக இறப்பர் உற்பத்தி உள்ளது.

**இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பு**

இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பைப் பிரதானமாக மூன்று பகுதிகளாகப் பிரித்துக் காட்டலாம்.

1. வேளாண்மைத் துறை
2. கைத்தொழில் துறை
3. பணிகள் துறை

மத்திய வங்கியின் ஆண்டறிக்கையானது, உற்பத்திக் கட்டமைப்புக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைகளைப் பிரித்துக் காட்டுகின்றபோது, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கைத்தொழில் வகைப்படுத்தலின் மூன்றாவது திருத்தத்துக்கு இணங்கியொழுகின்றவாறு, உலக வங்கியின் வெளியீடொன்றான World Economic Indicators க்காகத் தயாரிக்கப்பட்ட வகைப்படுத்தலை 2001 ஆம் ஆண்டிலிருந்து

1 வது புள்ளிவிபரக் குறிப்பு

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம்**

**1977 - 2003**

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வேகம்**

| ஆண்டு | வளர்ச்சி வேகம் |
|---|---|
| 1977 | 4.2 |
| 1978 | 8.2 |
| 1979 | 6.3 |
| 1980 | 5.8 |
| 1981 | 5.8 |
| 1982 | 5.1 |
| 1983 | 5.0 |
| 1984 | 5.1 |
| 1985 | 5.0 |
| 1986 | 4.3 |
| 1987 | 1.5 |
| 1988 | 2.7 |
| 1989 | 3.3 |
| 1990 | 6.2 |
| 1991 | 4.6 |
| 1992 | 4.3 |
| 1993 | 6.9 |
| 1994 | 5.6 |
| 1995 | 5.5 |
| 1996 | 3.8 |
| 1997 | 6.3 |
| 1998 | 4.7 |
| 1999 | 4.3 |
| 2000 | 6.0 |
| 2001 | -1.5 |
| 2002 | 4.0 |
| 2003 | 5.9% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பயன்படுத்தியுள்ளது. இவ்வகைப்படுத்தலின்படி வேளாண்மைத் துறையில் விவசாயம், காடு வளர்ப்பு மற்றும் மீன்பிடித் துறைகளும், கைத்தொழில் துறையில் சுரங்கம் அகழ்தல், தயாரிப்புகள், மின்சாரம், எரிவாயு (கேஸ்), நீர், உடனலப் பாதுகாப்புச் சேவை மற்றும் கட்டடவாக்கத் துறைகளும், பணிகள் துறையில் ஏனைய அனைத்து உப துறைகளும் உள்ளடங்குகின்றன. இதன் பிரகாரம் 2003 ஆம் ஆண்டின் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பானது தயாரிப்பு முறைகளுக்கு ஏற்ப 3 வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழும் 1வது வரைபடக் குறிப்பின் கீழும் சுருக்கிக் காட்டப்பட்டுள்ளது. 1998 ~ 2003 காலத்துக்கான இதன் விரிவான வகைப்படுத்தலானது 4வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டின் 5.9% வீதப் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மைத் துறையின் பங்களிப்பு 5% வீதமாகவும், கைத்தொழில் துறையின் பங்களிப்பு 25% வீதமாகவும் இருந்ததோடு, பணிகள் துறை 70% வீதமான அதி உயர் நூற்று வீதத்தில் பங்களிப்புச் செய்தது. (2வது வரைபடக் குறிப்பு)

இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்திக் கட்டமைப்பானது கடும் மாற்றத்துக்குள்ளாகி வருகின்றது. அதாவது, சுதந்திரமடைகின்றபோது இலங்கையின் வேளாண்மைத் துறையின் ஒப்பீட்டு முக்கியத்துவமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்றுவீதமாக நோக்கப்படுகின்றபோது 40% ஆக இருந்தது. இது இன்று 19% வரை கடும் வீழ்ச்சிக்குள்ளாகியுள்ளது. மறுபுறம் 1948 இல் 22% ஆக இருந்த கைத்தொழில் துறை இன்று 26% வரையிலும், பணிகள் துறையின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 40% இல் இருந்து 55% வரையிலும் அதிகரித்துள்ளது. இது ஒரு நாட்டின் வருமான மட்டம் அதிகரிப்பதைத் தொடர்ந்து நடைபெறுகின்ற கேள்வி முறையின் மாற்றத்துக்கு ஏற்ப நடைபெறுவதாகும். அதாவது, மக்களுடைய வருமானம் பரவலாக அதிகரிப்பதைத் தொடர்ந்து உணவுக்கான வருமானக் கேள்வி நெகிழ்வானது 1 க்குக் குறைந்த பெறுமானத்தை எடுப்பதோடு கைத்தொழிற் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான வருமானக் கேள்வி நெகிழ்வானது 1க்கு மேற்பட்ட பெறுமானத்தை எடுக்கின்றது. இது ஒரு நாடு அபிவிருத்தியடைவதைக் காட்டும் பண்பொன்றாகு மென்பது அபிவிருத்திப் பொருளியலாளர்களது கருத்தாகும். 2003 ஆம் ஆண்டாகின்றபோது, தேயிலை 1.3% ஆகவும், இறப்பர் 0.4% ஆகவும், தெங்கு 1.3% ஆகவும், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகளின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 3% ஆகவும் இருந்ததோடு, நெல் உற்பத்தி 3.2% ஆகவும், துணைப் பயிர்கள் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகள் 8.6% ஆகவும், மீன்பிடித் தொழில் 2.4% ஆகவும், வெட்டு மரம் 1.8% ஆகவும் மிகக் குறைந்ததொரு முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. மறுபுறம், கைத்தொழில் துறையில் தயாரிப்புத் தொழில்களின் ஒப்பீட்டு முக்கியத்துவம் படிப்படியாக அதிகரித்து 2003 ஆம் ஆண்டில் 16.4% ஐக் காட்டுகின்றது. 2003 ஆம் ஆண்டில், கட்டடவாக்கத் துறை 6.9% ஆகவும், சுரங்கம் அகழ்தல் 1.7% ஆகவும், மின்சாரம், எரிவாயு, நீர் மற்றும் உடனலச் சேவைகள் 1.6% ஆகவும் ஒப்பீட்டு முக்கியத்துவத்தினை அறிக்கை யிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 வது புள்ளிவிபரக் குறிப்பு

**பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளதும் வளர்ச்சியடையாதுள்ளதுமான துறைகள் (வருடாந்த நூற்று வீத மாற்றம்)**

| தலைப்பு | 1990 | 2000~2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|
| **(அ) வேளாண்மைத் துறை** | **2.4** | **~4.3** | **2.** | **1.5** |
| ~ தேயிலை | 4.4 | ~3.5 | 5.1 | ~2.2 |
| ~ இறப்பர் | ~1.5 | ~1.5 | 5.0 | 1.7 |
| ~ தெங்கு | 2.1 | 13.5 | 13.0 | 7.1 |
| ~ நெல் | 3.7 | ~5.7 | 6.1 | 2.4 |
| ~ மீன்பிடித் தொழில் | 4.0 | ~3.9 | 6.3 | ~6.9 |
| **(ஆ) கைத்தொழில் துறை** | **6.8** | **~2.1** | **1.0** | **5.5** |
| ~ சுரங்கம் அகழ்தல் | 2.8 | 0.7 | ~1.1 | 3.6 |
| ~ தயாரிப்புகள் | 8.1 | ~4.2 | 2.2 | 9.4 |
| ~ கட்டடவாக்கம் | 5.2 | 2.5 | ~0.8 | 5.5 |
| **(இ) பணிகள் துறை** | **5.6** | **~0.5** | **6.1** | **7.7** |
| ~ போக்குவரத்து/தொடர்பூட்டல் | 6.4 | 3.8 | 7.6 | 10.2 |
| ~ மொத்த, சில்லறை வியாபாரம் | 5.5 | ~6.7 | 5.6 | 7.3 |

3 வது புள்ளிவிபரக் குறிப்பு

**இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பு 2003**

| சேர் பெறுமதி | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக |
|---|---|
| வேளாண்மை | 19% |
| கைத்தொழில் | 26% |
| பணிகள் | 55% |
| மொத்தம் | 100 |

இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய துறையாக பணிகள் துறை மாறி, 55% முக்கியத்துவத்தினை 2003 ஆம் ஆண்டில் காட்டியதோடு, இதில் மிகப் பெரும் பணியாக மொத்த, சில்லறை வியாபாரம் மாறியுள்ளதோடு 20.1% வீதத்தை அறிக்கையிட்டுள்ளது. இரண்டாவது முக்கிய பணிகள் துறையாக போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் 13.6% வீதமாக உள்ளதோடு, மூன்றாவது முக்கிய பணிகள் துறையாக வங்கிச் சேவை, காப்புறுதி, அசையாச் சொத்துக்கள் ஆகியன 10.9% வீதத்தைக் காட்டுகின்றன. இதர பணிகள், அதாவது பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு 4% ஆகவும், வீட்டு உரிமை 1.6% ஆகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**பணிகள் துறையின் பங்களிப்பு 55% வீதமாயிருத்தல்**

இலங்கையைப் போன்ற வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டதொரு நாட்டில், அதேபோன்று கமத்தொழில் நடவடிக்கைளின் பொருட்டு உள்ள காணிகள் குறைந்து வருகின்ற நிலைமையினுள் பணிகள் துறையுடன் தொடர்புடைய பொருளாதாரச் செயற்பாடுகளின் அதிகரிப்பானது, அதிகரித்துவரும் சனத்தொகைக்குத் தேவையான வருமானம் ஈட்டுகின்ற வாய்ப்புகளை உருவாக்குவது தொடர்பில் மிக முக்கியமானதாயுள்ளது. இற்றையாகின்றபோது இலங்கையின் பணிகள் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (மொ.உ.உ.) அரைவாசியை விடக் கூடுதலான அளவு பங்களிப்புச் செய்வதோடு, 3 மில்லியன் மக்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்கியுள்ளது. இது ஒட்டுமொத்தமான தொழில்நிலையில் நூற்றுக்கு 43 வீதமாகும். ஒப்பீட்டு ரீதியில் கைத்தொழில் மற்றும் வேளாண்மைத் துறை மொ. உ. உ. யில் முறையே நூற்றுக்கு 27 மற்றும் 19 வீதத்தை வழங்குகின்றனவென்பதுடன், மேலும் 4 மில்லியன் மக்களுக்குத் தொழில் வழங்குகின்றது.

**சுதந்திரம் கிடைத்த காலகட்டத்திலும் அதன் பின்னரும் பொருளாதாரக் கட்டமைப்பு**

சுதந்திரம் கிடைக்கின்ற போது இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்திச் செயற்பாட்டின் ஆரம்ப கட்டத்தில் இருந்ததோடு, ஒட்டுமொத்தமான வெளியீடுகள் மற்றும் தொழில் நிலையைப் பொறுத்தவரை வேளாண்மைத் துறையில் பெருமளவு தங்கியிருந்தது. மொ. உ. உ. யில் 40% வீதப் பங்கிளிப்பைக் கொண்டிருந்த வேளாண்மைத் துறை ஒட்டுமொத்தமான தொழில்படையில் நூற்றுக்கு 40 வீதத்துக்கும் மேலதிகமாக வழங்கியது.

**4 வது புள்ளிவிபரக் குறிப்பு**

**நடைமுறைக் காரணிச் செலவுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கம் (சதவீதத்தில்)**

| துறை | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|---|---|
| **1. விவசாயம், காட்டுத் தொழில் மற்றும் மீன்பிடித் தொழில்** | **21.1** | **20.7** | **19.9** | **20.1** | **20.5** | **19.0** |
| **2. கைத்தொழில்** | **27.5** | **27.3** | **27.3** | **26.8** | **26.3** | **26.3** |
| 2.1 சுரங்கம் மற்றும் அகழ்தல் பணிகள் | 1.9 | 1.8 | 1.9 | 1.9 | 1.8 | 1.7 |
| 2.2 தயாரிப்புத் தொழில் | 16.5 | 16.4 | 16.8 | 16.0 | 15.9 | 15.5 |
| 2.3 மின்வலு, வாயு, நீர் | 7.6 | 7.6 | 7.3 | 7.6 | 7.2 | 7.2 |
| 2.4 கட்டடவாக்கம் | 1.5 | 1.5 | 1.2 | 1.3 | 1.4 | 1.8 |
| **3. பணிகள்** | **51.4** | **52.0** | **53.8** | **53.1** | **53.6** | **54.7** |
| 3.1 போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 11.1 | 11.4 | 11.7 | 12.1 | 12.4 | 13.6 |
| 3.2 மொத்த, சில்லரை வர்த்தகம் | 21.5 | 21.2 | 22.6 | 21.1 | 20.5 | 20.1 |
| 3.3 வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 7.6 | 8.1 | 7.6 | 8.5 | 9.2 | 10.9 |
| 3.4 வதிவிடங்களின் உடைமை | 1.9 | 1.8 | 1.8 | 1.8 | 1.7 | 1.6 |
| 3.5 பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 5.3 | 5.3 | 5.2 | 5.6 | 4.9 | 4.4 |
| 3.6 பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.0 | 4.1 | 4.0 | 4.1 | 4.0 | 4.0 |
| **4. மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| **5. வெளிநாட்டுத் தேறிய காரணி வருவாய்கள்** | **-1.3** | **-1.8** | **-2.1** | **-2.0** | **-1.7** | **-1.2** |
| **6. மொத்த தேசிய உற்பத்தி** | **98.7** | **98.2** | **97.9** | **98.0** | **98.3** | **98.8** |


(மூலம்: இலங்கை மத்திய வங்கி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1 வது வரை படக் குறிப்பு

மொ. உ. உ. துறைவாரியான பங்களிப்பு 2003




2 வது வரை படக் குறிப்பு

வளர்ச்சியில் துறைவாரியான பங்களிப்பு 2003




கைத்தொழில் துறை மொ. உ. உ. யில் நூற்றுக்கு 20 வீதத்துக்கும் குறைவான பங்களிப்பை வழங்கியதோடு, பணிகள் துறை மொ. உ. உ. யில் நூற்றுக்கு 40 வீதத்துக்கு அண்மிய அளவில் பங்களிப்புச் செய்தது.

சுதந்திரத்தின் பின்னரான காலகட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் பொருளாதாரமாக அபிவிருத்தியடைகின்ற போது, இயற்கை வளங்கள் குறைந்ததான அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாட்டின் அதிகரித்துவரும் தேவைகளை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான வகையில் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பினுள் குறிப்பிடத்தக்கதொரு மாற்றம் நடைபெற்றது. வேளாண்மைத் துறையினால் ஒட்டுமொத்தமான வெளியீடுகள் மற்றும் தொழில் நிலையில் செய்யப்படுகின்ற பங்களிப்பு அரைவாசியாகக் குறைவடைந்ததோடு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் அடுத்த அரைவாசியும் பணிகள் துறைக்குக் கூடுதலான சார்புநிலையைக் காட்டக்கூடிய வகையில் அதிகரித்தது. 2003 ஆம் ஆண்டாகின்றபோது கைத்தொழில் துறை மொ. உ. உ. யில் நாலிலொரு பங்கைவிடக் கூடுதலான அளவில் பங்களிப்புச் செய்கின்ற வகையில் ஒட்மொத்தமான தொழில் நிலையில் நூற்றுக்கு 22 வீதத்தினை வழங்கியது. மொ. உ. உ. யில் அரைவாசிக்கும் மேலதிகமான பங்களிப்புடன் கூடியதாக ஒட்டுமொத்தமான தொழில் புரிவோரில் நூற்றுக்கு 43 வீதம் பணிகள் துறையிலிருந்து உருவாகியது.

**மாற்றமுறும் பணிகள் துறையின் தேவை மேலெழுந்த காலகட்டம்.**

1977 இன் பின்னர் பொருளாதாரம் அபிவிருத்தியடைந்ததையும் பல்லினமயமாக்கலுக்கு உள்ளானதையும் தொடர்ந்து வினைத்திறனுடன் கூடியதும், நவீனமயமானதுமான உற்பத்தி மற்றும் நுகர்வுத் தொடர்புகளை இலகுவாக்குகின்ற துரித வளர்ச்சியுடன் கூடிய அதிக மாற்றமுறும் தன்மையைக் கொண்ட ஒட்டுமொத்தமான பணிகள் துறையின் தேவை மேலெழுந்தது. இத் தேவைகள் இனங்காணப்பட்டதினூடாக, வர்த்தகம், போக்குவரத்து. தொடர்பூட்டல் மற்றும் நிதியியல் சேவைகள் தளர்த்தப்பட்டு தனியார் துறையை மென்மேலும் பொருளாதாரத் தொழிற்பாடுகளில் தொடர்புபடுத்தக்கூடியதான சீர்திருத்தங்கள் அமுலாக்கப்பட்டன. அரசுக்குரியதாக மாத்திரம் ஒதுக்கப்பட்டதாயிருந்த ஒருசில துறைகள், குறிப்பாக தொடர்பூட்டல், போக்குவரத்து, அஞ்சல் சேவை ஆகியவற்றில் நிலவிய அரச தனியுரிமை நிலை மாற்றப்பட்டு அதிக போட்டியுடன் மற்றும் வினைத்திறனுடன் கூடியதான சூழலைக் கட்டியெழுப்பும் பொருட்டு தனியார் துறை மேலும் ஊக்குவிக்கப்பட்டது. இச் சீர்திருத்தங்கள் முக்கியமாக சேவைகள் துறை விரிவடைந்து உருவாகி வருகின்ற தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும் அதேபோன்று, சர்வதேச போக்குவரத்துத் தொழிற்பாடுகள், தொடர்பூட்டல், நிதியியல் சேவைகள் மற்றும் பணிகள் துறையை ஊக்குவித்தலை நோக்கமாகக் கொண்டிருந்தன. குறிப்பாக இச் சீர்திருத்தத்தை வலயத்திலுள்ள ஒருசில நாடுகளுடன் ஒப்பிடுகின்ற போது, இலங்கை ஒப்பீட்டளவில் அல்லது போட்டி ரீதியில் அனுகூலமான நிலையைக் கொண்டுள்ளதோடு, குறிப்பாக அயல் நாடான இந்தியாவின் பொருளாதாரம் முன்னேற்றமடைந்து உயர் வளர்ச்சிப் பாதையில்

5 வது புள்ளிவிபரக் குறிப்பு

**பொருளாதாரக் கட்டமைப்பின் வலய ரீதியிலான ஒப்பீடு**

| நாடு/ காலகட்டம் | | வேளாண்மை (%) | கைத்தொழில் (%) | பணிகள்(%) |
|---|---|---|---|---|
| சிங்கப்பூர் | 1985 | 1.0 | 34.5 | 68.8 |
| | 1995 | 0.2 | 33.3 | 65.3 |
| | 2001 | 0.1 | 32.0 | 67.7 |
| | 2002 | 0.1 | 33.6 | 66.6 |
| கொரியா | 1985 | 12.6 | 41.0 | 46.5 |
| | 1995 | 6.2 | 43.2 | 50.6 |
| | 2001 | 4.3 | 42.0 | 53.7 |
| | 2002 | 4.0 | 40.9 | 55.1 |
| இந்தியா | 1985 | 33.0 | 28.2 | 38.8 |
| | 1995 | 28.4 | 27.9 | 3.7 |
| | 2001 | 25.0 | 25.9 | 49.2 |
| | 2002 | 22.7 | 26.6 | 50.7 |
| தாய்லாந்து | 1985 | 15.8 | 31.8 | 52.3 |
| | 1995 | 11.0 | 39.3 | 49.7 |
| | 2001 | 10.4 | 40.7 | 48.9 |
| | 2002 | 9.0 | 42.5 | 48.5 |
| இலங்கை | 1985 | 24.4 | 26.8 | 48.8 |
| | 1995 | 18.7 | 28.1 | 53.1 |
| | 2001 | 20.1 | 6.8 | 53.1 |
| | 2002 | 20.1 | 26.3 | 53.6 |
| மலேசியா | 1995 | 12.9 | 41.4 | 47.9 |
| | 2001 | 8.5 | 49.1 | 47.3 |
| | 2002 | 9.1 | 48.3 | 46.4 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசித்ததைத் தொடர்ந்து ஏற்படுகின்ற அனுகூலங்களைக் கைப்பற்றுதலையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

இலங்கையினதும் வலயத்திலுள்ள ஏனைய நாடுகளினதும் பணிகளை ஒப்பிடுகின்ற போது, இலங்கையின் அனுபவங்கள் வலயத்திலுள்ள ஏனைய நாடுகளின் அவதானிப்புகளுடன் சிறப்பாகப் பொருந்துவதாயுள்ளன. (5 வது புள்ளிவிபரக் குறிப்பு)

## 2

### இலங்கையின் அரச பொருளாதாரத் தொழிற்பாடுகள்

2003 ஆம் ஆண்டில் அரச நிதியியல் கொள்கை ரீதியிலான உபாய வழிமுறைகள் மூன்று கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்பட்டன. அதாவது, அரச படுகடன்களை தாங்கக்கூடிய மட்டத்திற்குக் குறைத்தல், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் நடுத்தரகால உப பொருளாதார அபிவிருத்தியை ஈட்டிக்கொள்வதன் ஊடாக தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் இம் மூன்று கோட்பாடுகளுமாகும்.

தற்போது இலங்கையின் அரச நிதியியல் தொழிற்பாடுகள் தொடர்பான தரவுகள் 1986 இல் சர்வதேச நாணய நிதியத்தினால் அறிமுகப் படுத்தப்பட்ட 'அரச நிதியியல் தரவுகள் தொடர்பான கைநூலின்' (Government Finance Statistic Manual - 1986) அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகின்றன. ஆயினும் 2001 இல் சர்வதேச நாணய நிதியம் தனது அங்கத்துவ நாடுகளுக்கு நிதியியல் தரவுகள் தயாரிக்கப்படுதல் தொடர்பாகப் புதியதொரு கைநூலை அறிமுகப்படுத்தியது. இம்முறையின் கீழ் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் தொடர்பான தரவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்குப் பதிதல் ஆரம்பமாகியது. இம்முறையின் கீழ் ஐந்தொகையைத் தயாரிப்பதற்கும் அரசுக்கு நேரிடுகின்றது. 1986 ஆம் ஆண்டின் முறையை விடப் புதிய முறையினூடாக அரச நிதியியல் தரவுகளின் பொழிப்பைப் பெறுகின்ற போது, பல மீதிகளைத் தயாரித்துக்கொள்ள முடியுமாதலால் பேரண்டப் பொருளாதாரப் பகுப்பாய்வுகளுக்கு இது மிகவும் பயனுள்ளதாயுள்ளது. இலங்கை இப் புதிய முறையில் பிரவேசிப்பதை 2003 இல் ஆரம்பித்த போதிலும் இதனைப் பூர்த்தி செய்வதற்கு குறைந்தபட்சம் மேலும் ஐந்து ஆண்டுகளாவது எடுக்கலாமெனக் கருதப்படுகிறது.

### புதிய முறையின் குறிக்கோள்களும் பண்புகளும் உள்ளமைப்பும்

அரச நிதியியல் தரவுகளைத் தயாரிக்கின்ற புதிய முறையின் பிரதானமான குறிக்கோள் யாதெனில் ஒட்டுமொத்தமான அரசதுறையினதும் செயற்பாட்டைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்வதற்குப் பொருத்தமான விளக்கமான கோட்பாட்டு ரீதியிலான முறையொன்றையும் கணக்கீட்டு முறையொன்றையும் அறிமுகப் படுத்துதலாகும்.

இப்புதிய முறையில் பிரதானமான இரண்டு பண்புகள் உள்ளன. முதலாவது, 1993 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தேசிய கணக்கீட்டு முறையினுள் அரச துறையின் தொழிற்பாடுகளுக்கு வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ளவாறு (அதாவது, மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தொழிற்பாடுகள் என்றவாறு) அரச நிதியியல் தரவுகளை வெளிப்படுத்தல் எனக் கூறலாம்.

இரண்டாவதாக, மொத்தக் கையிருப்பு மற்றும் போக்குகள் தொடர்பான ஒன்றுதிரட்டிய கூற்றைத் தயாரித்தல் எனக் கூறலாம். மொத்தக் கையிருப்பில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் போக்குகளில் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய பொருளாதாரப் போக்குகளும் உள்ளடங்குகின்றன.

புதிய முறையின் புதிய உள்ளமைப்புக்கு ஏற்ப, பிரதானமான மூன்று நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(1) அரச பணிகள் தொடர்பான கூற்று

(2) ஏனைய பொருளாதாரப் போக்குகள் தொடர்பான கூற்று

(3) ஐந்தொகை (நிதிப் போக்குகள் கூற்றுடன் சேர்த்து)

### 2003 அரச நிதியியல் கொள்கையின் ஒட்டுமொத்தமான அவதானிப்புகள்

**அரச நிதியியல் கொள்கை எனப்படும் பிஸ்கல் கொள்கை** (Fiscal Policy) என்பது அரச பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அரச வரிகள், அரச செலவுகள் மற்றும் அரச கடன்களைச் சிறப்பாக முகாமை செய்கின்ற செயற்பாடாகும். 2003 அரச நிதியியல் தொழிற்பாடுகளின் ஒப்பீட்டு முக்கியத்துவத்தைக் காட்டுகின்ற புள்ளிவிபரங்களைப் பின்வருமாறு சுருக்கிக் காட்டலாம்.

- அரச வரி வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்று வீதமாக வீழ்ச்சியடைதல். அதாவது, 1990 இல் 19% வீதமாயிருந்த வரி வருமானம் 2003 இல் 13.2% வீதமாயிருந்தமை.
- மொத்த வரி வருமானம் மொத்த அரச வருமானத்தில் 84% வீதமாயிருந்தமை.
- மொத்த வரி வருமானத்தில் 83% வீதம் மறைமுக வரிகளாயிருந்ததோடு 17% வீதம் மாத்திரம் நேரடி வரிகளாயிருந்தமை.
- மொத்த மறைமுக வரியான 83% வீதத்திலுள் உள்நாட்டுப் பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி 37% வீதத்தையும் இறக்குமதி வரி46% வீதத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தியமை.
- வரிகளல்லாத வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5% வீதமாயிருந்தமையும், மொத்த அரச வருமானத்தில் 16% வீதமாயிருந்தமையும்.
- அரச மொத்த செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.7% வீதமாயிருந்ததோடு, இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19.0% வீதமான நடைமுறைச் செலவுகள் மற்றும் 4.7% வீதமான மூலதனச் செலவுகள் அத்துடன் தேறிய கடன் வழங்கல்களை உள்ளடக்கியிருந்தமை.
- ஒட்டுமொத்தமான வரவு~செலவுப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.0% வீதமாயிருந்தமை.
- ஒட்டுமொத்தமான அரச படுகடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்று வீதமாக 105.9% வீதமாயிருந்தமை.

ஒட்டுமொத்தமாக நோக்குகின்ற போது வருமானம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ள நிலையில்கூட, செலவை மட்டுப் படுத்தக்கூடிய நடவடிக்கைகள் வெற்றிகர மாகக் கடைப்பிடிக்கப்பட்டதன் காரணத்தினால், ஒட்டுமொத்தமான வரவு~செலவுப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8% வீதம் வரை குறைக்க முடியுமாயிருந்தது. (3வது வரைபடக் குறிப்பு) ஆயினும் இது 2003 வரவு~செலவுத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட 7.5% வீதத்துடன் ஒப்பிடப்படுகின்ற போது 0.5% வீத அதிகரிப்பாகும். 2002 இன் இறுதிப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிதியியல் முகாமைத்துவச் (பொறுப்புக்கள்) சட்டத்தின் மூலம் அரச நிதியியல் தொழிற்பாடுகளை மிகவும் முன்னெச்சரிக்கையுடன் கூடியதாக நெறிப்படுத்துதலும் மற்றும் அரச நிதியியல் தொழிற்பாடுகளின் ஒழிவுமறைவற்ற தன்மையை மேலும் விரிவாக்குதலும் எதிர்பார்க்கப்பட்டதோடு 2003 வரவு~செலவுத் திட்ட நிலைமைகள் பெரும்பாலும் இதற்கு இணங்கியொழுகின்றவாறு செல்வதற்கு முயற்சித்துள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது.

அரச நிதியியல் முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் படி 2006 இன் இறுதியாகின்ற போது எதிர்பாக்கப்படுகின்ற இலக்குகள் பின்வருமாறு.

- ஒட்டுமொத்தமான வரவு~செலவுப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5% வீதம் வரை குறைத்தல்.
- அதன் பின்னர் மேற்படி பற்றாக்குறை இம் மட்டத்தை விடக் குறைவான பெறுமானத்தில் பேணிவரப்படுதல் வேண்டும்.
- அரசின் தீர்க்கப்படாதுள்ள கடன் தொகையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 85% வீதம் வரை குறைத்தலும் 2013 ஆகின்றபோது இதனை மேலும் 60% வீதம் வரை குறைத்தலும்.


2003 அரச நிதியியல் தொழிற்பாடுகளின் குறிப்பிடத்தக்க விடயங்களை பிரதானமான ஒருசில உப தலைப்புகளின் கீழ், அதாவது அரசிறை, அரச செலவு, வரவு~செலவு, அரச படுகடன் மற்றும் அரச துறைச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் கீழ் கலந்துரையாடுதல் முக்கியமானதாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3 வது வரைபடக் குறிப்பு**

**செலவு, வருமானம், நடைமுறைக் கணக்கு மற்றும் ஒட்டுமொத்தமான பற்றாக்குறை**




மூலம் : பிரதானமான பொருளாதாரச் சுட்டெண் ஆ.அ.வ.

**அரசிறை**

அரசிறை என்பது வரி மற்றும் வரியல்லா வழிகளின் மூலம் அரசால் சேகரிக்கப்படுகின்ற வருமானமாகும். 2003 ஆம் ஆண்டில் மொத்த அரசிறையானது ரூபா 277 பில்லியனாக இருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.7% வீதமாகும். (இதில் 13.2% வீதம் வரி வருமானமாயிருந்ததோடு எஞ்சிய 2.5% வீதமும் வரியல்லா வருமானமாயிருந்தது.)

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்று வீதமாக அரசிறை குறைந்து வருகின்ற போக்கைக் காணக் கூடியதாயுள்ளது. (6வது புள்ளிவிபரக் குறிப்பு)

இலங்கையின் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.2% வீத அளவில் குறைந்ததொரு நூற்று வீதத்தைக் காட்டுகின்றதோடு, இது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சராசரி வீதமான 18% வீதத்துடன் ஒப்பிடப்படுகின்ற போது மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் 38% வீதத்துடன் ஒப்பிடப்படுகின்ற போது மிகவும் குறைந்ததொரு நூற்றுவீதமாகும். 2003 இல் வரி வருமானம் வீழ்ச்சியடைவதற்குப் பல காரணங்கள் ஏதுவாயமைந்தன.

- வரவு~செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட வரி நிவாரணங்கள் அதிகரித்தமை.
- வரித் தளத்தை விரிவாக்குவதற்கு முன்வைக்கப்பட்ட வரி தொடர்பான ஒருசில பிரேரணைகளை அமுலாக்குதல் தாமதிக்கப் பட்டமை.
- சேகரிக்கக் கூடியதாயிருந்த வரி வருமானம் தொடர்பில் 'வரி மன்னிப்பு' வழங்கியமை பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியமை.
- வருமான வரி சேகரித்தல் குறைவடைதல், இதில் தனி நபர் வருமான வரி சேகரித்தல் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியுற்றமை பிரதானமான காரணமாயிருந்தது. (வரியிலிருந்து விடுவிக்கப்படுகின்ற வருமான மட்டம் உயர்த்தப்பட்டமை, வரித் தொகுதிகள் உயர்த்தப்பட்டமை, உயர் வரி வீதம் 35% வீதத்திலிருந்து 30% வீதம் வரை குறைக்கப்பட்டமை அரச துறை ஊழியர்களின் படிகள் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டமை இந் நிலைமைக்குக் காரணமாயமைந்தது.)
- நுகர்வின் மீது சேகரிக்கப்பட்ட வரி வருமானம் 11% வீதத்தால் வீழ்ச்சியடைந்தமை.
- உற்பத்தி வரி வருமானம் 2% வீதத்தால் வீழ்ச்சியுற்றமை.

1990 இல் இருந்து நோக்குகின்ற போது வரி வருமானம் 19% வீதத்திலிருந்து 13% வீதம் வரை நூற்று வீதத்தைப் பொறுத்தவரை 6 இலக்கங்களால் குறைவடைந்ததன் மூலம் ரூபா 106 பில்லியனை இழக்க வேண்டி வந்ததோடு, இது 2003 அரச சம்பளங்களுக்கான செலவுக்குச் சமமாயிருந்தது.

அரசிறை நீண்ட காலமாகக் குறைவடைந்து வருகின்ற போக்கைத் திசை திருப்புவதற்கு கடந்த தசாப்தத்தினுள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ளிடையே, பண்டங்கள் சேவைகள் வரி (GST) மற்றும் தேசிய பாதுகாப்பு வரி (NSL) இல்லா தொழிக்கப்பட்டு சேர் பெறுமதி வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டமை முக்கிய இடத்தை வகிக்கின்றது.

6வது புள்ளிவிபரக் குறிப்பு

**அரசிறை: 1990 - 2003 மொ. உ. உ. யின் நூற்றுவீதமாக**

| ஆண்டு | நேரடி வரி | மறைமுக வரி | மொத்த வரி | வரியல்லா வருமானம் | மொத்த வருமானம் |
|---|---|---|---|---|---|
| 1990 | 2.3 | 16.7 | 19.0 | 2.1 | 21.1 |
| 1991 | 2.6 | 15.7 | 18.3 | 2.2 | 20.5 |
| 1992 | 2.6 | 15.4 | 18.0 | 2.2 | 20.2 |
| 1993 | 2.5 | 14.7 | 17.2 | 2.5 | 19.7 |
| 1994 | 2.6 | 14.5 | 17.1 | 1.8 | 18.9 |
| 1995 | 2.6 | 15.2 | 17.8 | 2.7 | 20.5 |
| 1996 | 2.7 | 14.3 | 17.0 | 2.1 | 19.1 |
| 1997 | 2.4 | 13.6 | 16.0 | 2.5 | 18.5 |
| 1998 | 2.0 | 12.5 | 14.5 | 2.7 | 17.2 |
| 1999 | 2.6 | 12.4 | 15.0 | 2.7 | 17.7 |
| 2000 | 2.2 | 12.3 | 14.5 | 2.3 | 16.8 |
| 2001 | 2.5 | 12.1 | 14.6 | 2.0 | 16.6 |
| 2002 | 2.4 | 11.6 | 14.0 | 2.5 | 16.5 |
| 2003 | 2.2 | 11.0 | 13.2 | 2.5 | 15.7 |

**சேர் பெறுமதி வரி (VAT)**

சேர் பெறுமதி வரி என்பது பண்டங்கள் மற்றும் சேவைகளின் நுகர்வின் மீது அறவிடப்படும் ஒரு வரியாகும். இது அப்போதிருந்த பண்டங்கள், சேவைகள் வரியுடன் (GST) தேசிய பாதுகாப்பு அறவீட்டு வரியை (NDL) ஒன்றிணைத்து அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டதொரு வரியாகும். சேர் பெறுமதி வரி எனப்படும் வெற் (VAT) இன் கீழ், பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியின் மற்றும் விநியோகத்தின் அனைத்துக் கட்டங்களிலும் அதனோடு சேர்க்கப்படுகின்ற பெறுமதியின் மீதே வரி அறவிடப்படுகின்றது. வரியின் இறுதிச் சுமையை நுகர்வோரே தாங்குகின்றனர்.

வெற் வரியில் இரண்டு முக்கியத்துவங்கள் உள்ளன. முதலாவது, வரியில் திரிபு நிலை குறைவாயுள்ளது. (இடைநிலைக் கொடுக்கல் வாங்கல்களில் வரி அறவிடப்படாது இறுதி நுகர்வின்போது வரி அறவிடப்படு வதனாலாகும்). இரண்டாவது, வரி மீது வரி அறவிடப்படுகின்ற பிரச்சினை (Cascading Effect) இதன் மூலம் நீங்குகின்றது.

வெற் வரியின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வரி வருமானம் கிடைக்காமைக்கான முக்கியமான காரணம், வெற் வரியின் விளைவு வீதம் குறைந்த மட்டத்தில் இருப்பதாகும். வெற் வரியின் விளைவு வீதம் பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

$$\frac{\text{சேர் பெறுமதி வரி வருமானம்}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

இது இலங்கையில் 26% ஆகும். பிலிப்பைன், சிங்கப்பூர், வியற்னாம், மொரீசியஸ் ஆகிய நாடுகளில் 30% - 40% வீதத்துக்கு இடையிலுள்ளது. பெருந்தொகையான பண்டங்கள் வெற் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளமையே இக் குறைவுக்குக் காரணமாகும்.

**சேர் பெறுமதி வரியின் பண்புகள்**

- நுகர்வின் மீது அறவிடப்படும் ஒரு வரியாக இருத்தல்
- அனைத்து இறக்குமதிகளிலிருந்தும் வரி அறவிடப்படுதல்
- அனைத்து ஏற்றுமதிகளும் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வரி அறவிடப்படும் வருமானமானது காலாண்டுக்கு ரூபா 5 இலட்சம் அல்லது வருடத்துக்கு 18 இலட்சத்துக்கு அதிகமானதாயிருத்தல்
- 2005 வரவு-செலவுத் திட்டத்தின் படி 0%, 5%, 15%, மற்றும் 18% என நான்கு வரி வீதங்கள் உள்ளன.

இவ்வாறு சேர் பெறுமதி வரி தொடர்பாக நடைபெற்றுள்ள பல்வேறு செயற்பாடுகளைத் தவிர அரசிறையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு வேறு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சேர் பெறுமதி வரித் (VAT) தளத்தை விரிவாக்கும் பொருட்டு, இவ்வரியை நிதியியல் சேவைகள் துறைக்கும் விதித்தல்.
- சேர் பெறுமதி வரி சேகரிப்பு முறையிலுள்ள பலவீனங்களை அகற்றுதல்.
- வரி நிருவாகத்தை முன்னேற்றுதல்
- உயர் எல்லை வரி வீதத்தை 35% வீதத்திலிருந்து 30% வீதம் வரை குறைத்தல்.
- ஏனைய மறைமுக வரிகளின் சேகரிப்பை முன்னேற்றும் பொருட்டு கொள்கை ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- இறக்குமதி வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பெரும்பாலான பண்டங்களின் மீது 2.5% வீத புதிய தீர்வை வரியை விதித்தல்.
- அனைத்து உற்பத்தி வரிப் பொறுப்புகளையும் ஒன்றிணைத்தல்.
- சுங்க வரித் திணைக்களத்தினுள் நிருவாகத்தை முன்னேற்றுதல்.

**இலங்கையின் வரி வருமானத்தின் உள்ளடக்கம்**

**இலங்கையின் மொத்த வருமானத்தில் 83.8% வீதம் வரி வருமானமாகும். எஞ்சிய 16.2% வீதமும் வரியல்லா வருமானமாகும். 2003 ஆம் ஆண்டில் மொத்த வரி வருமானம் ரூபா 232 பில்லியனாகும்.** மொத்த வரி வருமானத்தில் நுகர்வு வரி (உள்நாட்டுப் பண்டங்கள், சேவைகள் வரி (37%), வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரி (46%)) 83% வீதமாகும். எஞ்சிய 17% வீதமும் வருமான வரியாகும்.

இலங்கையின் அரசிறையின் உள்ளடக்கம் 7வது புள்ளிவிபரக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**2003 இல் இலங்கையின் வரி உள்ளமைப்பின் ஒருசில குறிப்பிடத்தக்க பண்புகள்**

- ♦ 2002 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.4% வீதமான வரி வருமானம் 2003 இல் 2.2% வீதமாகக் குறைவடைந்தமை. இதற்கு தனிநபர் மற்றும் கூட்டு வருமான வரி ஆகிய இரண்டு வகை வரிகளினதும் குறைவு காரணமாயிருந்தது. ஆயினும் வட்டி மீதான வரி (தடுத்து வைத்தல் வரி) 2002 ஆம் ஆண்டில் 0.7% வீதத்திலிருந்து 2003 ஆம் ஆண்டில் 0.8% வீதம் வரை அதிகரித்தது. 10% வீத தடுப்பு வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள வட்டி எல்லை ஆண்டுக்கு ரூபா 108,000 ஆகும். தனிநபர் வருமான வரி வீத எல்லை 2005 வரவு-செலவுத் திட்டத்தின்படி ஆண்டுக்கு ரூபா 300,000 ஆகும்.

**7 வது புள்ளிவிபரக் குறிப்பு**
**அரசிறையின் உள்ளடக்கம்**

| வருமானம் | நூற்று வீதம் |
|---|---|
| வருமான வரி | 14.2 |
| GST/VAT | 35.2 |
| உற்பத்தி வரி | 18.4 |
| இறக்குமதி வரி | 12.4 |
| ஏனைய வரிகள் | 3.6 |
| வரியல்லா வருமானம் | 16.2 |
| மொத்த அரசிறை | 100.0 |

- ♦ சேர் பெறுமதி வரி வருமானம் 2003 இல் 5% வீதத்தால் குறைவடைந்தமை. இதற்கு ஒருசில காரணங்கள் ஏதுவாயமைந்துள்ளன.
  - ~ சேர் பெறுமதி வரித் தளத்தை விரிவாக்கும் பொருட்டு செயற்படுத்தப்படவிருந்த ஒருசில பிரேரணைகள் ஒத்திவைக்கப்பட்டமை.
  - ~ பல வரி வீதங்கள் செயற்படுத்தப்பட்டமை.
  - ~ வரி சேகரிப்பு முறையிலுள்ள பலவீனங்கள்.
  - ~ இறக்குமதிகளின் மீதான சேர் பெறுமதி வரி 2002 ஆம் ஆண்டின் 3% வீதத்திலிருந்து 2003 ஆம் ஆண்டில் 2.6% வீதம் வரை குறைக்கப்பட்டமை.
- ♦ உற்பத்தி வரி (பெற்றோலிய உற்பத்திகளின் மீதான வரி, சிகரட் மீதான உற்பத்தி வரி) வருமானம் 2003 இல் 2% வீதத்தால் குறைவடைந்தமை.
- ♦ இறக்குமதி வரி வருமானம் 2003 இல் 21% **வீதத்தால் அதிகரித்தமை. இதில் 20% வீத இறக்குமதி மிகை வரியும் உள்ளடங்குகின்றது. வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது விதிக்கப்படுகின்ற ஒரு வரியாகக் கருதப்படுகின்ற துறைமுக,** விமான நிலைய அபிவிருத்தி வரி 2003 இல் 57% வீதத்தால் அதிகரித்தமை சிறப்பானதொரு பண்பாகும். இது முத்திரை வரி நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக விதிக்கப்பட்ட இரண்டு வரிகளில் ஒன்றாகும். மற்றையது பற்று வரியாகும். ஆயினும் 2003 இல் இந்த இரண்டு வரிகளாலும் பெறப்பட்ட வருமானம் முத்திரை வரியால் பெறப்பட்ட வருமானத்தைத் தாண்டிச் செல்லவில்லை.

**வரியல்லாத வருமானம்**

இலங்கை மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் (ரூபா 10 பில்லியன்), கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் (ரூபா 9 பில்லியன்) அரச தொழில் முயற்சிகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் (ரூபா 5.4 பில்லியன்) மூலம் கிடைக்கப்பெற்ற அரச வரியல்லா வருமானம் 2003 இல் ரூபா 44.9 பில்லியனாயிருந்ததோடு, அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகின்ற போது 14% வீத அதிகரிப்பாகும்.

**அரச செலவுகள்**

2003 ஆம் ஆண்டில் மொத்த அரச செலவுகள் ரூபா 418 பில்லியனாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.7% வீதமாகும். இதில் ரூபா 335 பில்லியன், அதாவது மொத்த அரச செலவுகளில் 80% வீதமானவை நடைமுறைச் செலவுகளாகும். **இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19% வீதமாகும்.** மொத்த மூலதன மற்றும் தேறிய கடன் **வழங்கல்கள் ரூபா 83 பில்லியனாகும். இது மொத்த அரச செலவுகளில் 20% வீதமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.3% வீதமாகும்.**

**நடைமுறைச் செலவுகள்**

அரச பணிகளைப் பேணிவரும் பொருட்டு ஏற்கப்படுகின்ற அனைத்துச் செலவுகளும் நடைமுறைச் செலவுகளாகும். இந் நடைமுறைச் செலவுகளில், பண்டங்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்கப்படும் செலவுகள் (மத்திய அரசாங்கத்தின் சிவில் துறை, பாதுகாப்புத் துறை, வட்டி செலுத்துகைகள், ஓய்வூதியம் உட்பட ஏனைய நடைமுறை மாற்றல்கள்) உள்ளடங்குகின்றன. நடைமுறை மாற்றல்கள் என்பது அரச பணிகளைப் பேணிவரும் பொருட்டு ஏற்கப்படும் செலவுகளில் உள்ளடங்கியிருக்கின்ற ஒருதலைப்பட்சச் செலவுகளாகும். இதன்படி நடைமுறைச் செலவுகளில் பரிமாற்ற வடிவத்தில் நடைபெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களைப் போன்றே ஒருதலைப்பட்சமான கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடங்குவதைக் காண்கிறோம். தேசிய கணக்கீட்டின்போது இந் நடைமுறைச் செலவுகளை அரச நுகர்வின் கீழ் உள்ளடக்குகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறைச் செலவுகளின் பண்டங்கள், சேவைகளுக்கான செலவுகள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுகின்றன. அதாவது, உற்பத்தியொன்று உருவாவதற்குக் காரணமாயமைகின்ற செலவு வகைகள் மட்டுமேயாகும். வருமான மீள் பரவலை உருவாக்குகின்ற மாற்றல் செலவுகள் தவிர்க்கப்படுகின்றன.

பொருளாதார வகைப்படுத்தலின்படி இலங்கையின் நடைமுறைச் செலவுகளின் உள்ளடக்கம் 8வது புள்ளிவிபரக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

புள்ளிவிபரக் குறிப்பின்படி இலங்கையின் அரச வரவு-செலவுத் திட்டத்தில் நடைமுறைச் செலவில் ஒருசில முக்கியமான பண்புகள் உள்ளன. முதலாவது, நடைமுறைச் செலவில் 37% வீதம் அரச கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்கே செலவிடப்படுகின்றது. இது அரசாங்கம் வரவு-செலவுப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு பெருமளவில் கடன் பெறுவதன் விளைவாகும். இதன் காரணமாக வருடாந்தம் அரச படுகடன் பணிகளை (கடன் தவணைப் பணம், வட்டி) செலுத்துவதற்காக **அரசாங்கத்தால்** பெருமளவு வளங்களை ஒதுக்கவேண்டி நேர்ந்துள்ளது.

இரண்டாவதாக, நடைமுறைச் செலவுகளில் 14% வீதமானவை அரச மற்றும் ஏனைய துறைகளின் ஏனைய பண்டங்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு செலவழிக்கப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு ரூபா 47 பில்லியனாயிருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7% வீதத்துக்கு அண்மியதொரு தொகையாகும். வளங்கள் வரையறுக்கப் பட்டதாயுள்ள இலங்கையைப் போன்றதொரு நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 வது புள்ளிவிபரக் குறிப்பு

**இலங்கையின் நடைமுறைச் செலவுகளின் உள்ளடக்கம் 2003**

| துறை | நடைமுறைச் செலவில் % |
|---|---|
| 1. சம்பளமும் படிகளும் | 27.4 |
| 2. ஏனைய பண்டங்களும் சேவைகளும் | 13.7 |
| 3. படுகடன் வட்டி | 37.4 |
| 4. துணை அரச நிறுவனங்களின் மாற்றல்களும் ஏனைய மாற்றல்களும் | 5.8 |
| 5. குடும்ப மாற்றல்களும் ஏனையவையும் | 15.7 |
| மொத்த நடைமுறைச் செலவுகள் | 100.0 |

யுத்தத்துக்காகச் செய்கின்ற செலவு பாரிய அளவு அதிகரிப்பதில் தறுவாய்ச் செலவினம் அதிகமாயிருக்கும். அதாவது கல்வி, சுகாதாரம் போன்ற நலன்புரித் துறைகளில் ஈடுபடுத்துவதற்குள்ள வளங்கள் இதன் மூலம் குறைவடைவதனாலாகும். அதே போன்று பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவடைதல், தொழில் வாய்ப்புகள் குறைவடைதல், பணவீக்கத் தாக்கம் அதிகரித்தல், சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் தீவிரமடைதல், மக்களது வாழ்க்கை நிலை சிக்கலுக்குள்ளாதல், உயிர்கள் அழிவுக்குள்ளாதல், சொத்துக்கள் அழிவுறுதல் ஆகியன யுத்தத்தின் ஏனைய பொருளாதார மற்றும் சமூக விளைவுகளாகும். 2002 முதல் இற்றைவரை யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக 2003 ஆம் ஆண்டின் பாதுகாப்புச் செலவை ரூபா 47 பில்லியனுக்கு வரையறுக்கக் கூடியதாயிருந்தது.

மூன்றாவதாக, குடும்பங்களுக்கான மற்றும் ஏனைய மாற்றல்கள் 16% வீதமும் துணை அரச நிறுவனங்களுக்கான மாற்றல்களும் ஏனைய மாற்றல்களுமாக 6% வீதமும் சேர்ந்து மொத்த மாற்றல் செலவுகள் 22% வீதமாகும். இலங்கையின் குடும்ப மாற்றல்களாக, (நடைமுறை ஒப்படைப்புகளின்) அதன் பெறுமதிகளுக்கு ஏற்ப முறையே ஓய்வூதியம், சமுர்த்திக் கொடுப்பனவுகள், இலவச பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலைச் சீருடை, பருவகாலப் பயணச் சீட்டுகள், ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கான கொடுப்பனவுகள், அகதிகளுக்கான உலர் உணவு முத்திரைகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**மூலதனச் செலவுகள்**

மூலதனச் செலவுகள் என்பது, உண்மைச் சொத்துக்களை அடையப் பெறுவதற்காகச் செய்யப்படுகின்ற செலவுகளினதும், மூலதன மாற்றல்கள் எனப்படும் மூலதன ஒப்படைப் புக்களினதும் அரச நிறுவனங்களுக்கான கடன் வழங்கல்களினதும் கூட்டுத்தொகையாகும். தேறிய கடன் வழங்கல் என்பது, கடன் வழங்கலுக்கும் கடன் மீளப் பெறப்படலுக்கும் இடையிலான வித்தியாசமாகும். இதன் கீழ் முற்பணக் கணக்குகளின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீள் கட்டமைத்தல் செலவுகளும் உள்ளடங்கு கின்றன. துரித கதியிலான பொருளாதார வளர்ச்சிக்கான தளத்தை அமைத்துக் கொடுத்தல் அரச முதலீட்டுச் செலவுகளின் நோக்கமாகும்.

2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகின்றபோது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.6% வீதமாயிருந்த அரச முதலீடுகள் 2003 ஆம் ஆண்டில் 5.0% வீதமாயிருந்தது.

**அண்மைக் கால அரச செலவுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள்**

- ஒழுங்குமுறையான செலவுக் கட்டுப்பாட்டு முறைகள் பிரயோகிக்கப்பட்டமை
- வீணான செலவுகள் நிறுத்தப்பட்டமை
- முன்னுரிமை வழங்கப்பட முடியாத செலவுகள் நிறுத்தப்பட்டமை
- நலன்புரிச் செலவுகள் பொருத்தமான இலக்குகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டமை (இதன் பொருட்டு புதிய நலன்புரி நன்மைகள் சட்டமொன்று 2002 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டம் என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்டது. இச் சட்டத்தின் நோக்கம் யாதெனில், நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் நன்மைகளைச் செலுத்துவதற்குத் தேவைப்படுகின்ற செயற்பாடுகளுக்கான சட்ட ரீதியானதும் கருத்தியல் ரீதியிலானதுமான வரையறைகளைத் தயாரிப்பதாகும்.)
- அரச நிறுவனங்களுக்கும் ஏனைய அரச மட்டத்திலான நிறுவனங்களுக்கும் செய்யப்பட்ட ஒப்படைப்புகள் தீவிர கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை.
- நடைமுறைச் செலவுகளில் 37% வீதத்தை வட்டியாகச் செலுத்துவதற்கு நேர்ந்தமையும் இது நடைமுறைச் செலவினுள் தனிப்பெரும் செலவாக இருந்தமையும்.
- பொதுசனப் பாதுகாப்பு மற்றும் சட்டம் தொடர்பான செலவுகள் தவிர்ந்த 2003 ஆம் ஆண்டின் பாதுகாப்புச் செலவுகள் ரூபா 47 பில்லியன் வரையிலான குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டமை.
- சமூகத்தில் மிகவும் தேவைப்பாடுடைய குழுவினருக்கு மாத்திரம் பாடசாலைச் சீருடையை வழங்குவதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டமை.
- ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் அரசுக்குச் சொந்தமான பங்குகளில் 12% வீதத்தையும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அரசுக்குச் சொந்தமான பங்குகளில் 39% வீதத்தையும் தனியார்மயப்படுத்தியமை.
- பெற்றோலியத் துறை தளர்த்தப்பட்டமையும் தன்னியக்க முறையில் விலையைத் தீர்மானிக்கின்ற சமன்பாடொன்றை அறிமுகப்படுத்தியதன் மூலம் அத்துறையின் வர்த்தக நிலைமை மேம்படுத்தப்பட்டமையும்.
- 2002ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க நீர் மின்சார மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலம் மின்சார சபையின் தனியுரிமை நிலையிலிருந்து ஒரு சில துறைகள் நீக்கப்பட்டமை.
- பேருந்துக் கட்டணங்களைத் தீர்மானிக்கும் பொருட்டு விலைச் சமன்பாடொன்று அறிமுகப்படுத்தப்பட்டமை.
- சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறும் திட்டமொன்று (VRS) ஒரு சில அரச நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்டமை.

**பணிகளின்படி அரச செலவுகளை வகைப்படுத்தல்.**

பணிகளின்படி அரச செலவுகளை பிரதானமான நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்

1. சாதாரண பொதுப் பணிச் செலவுகள் = 22%
2. பொருளாதாரப் பணிச் செலவுகள் = 20%
3. அரச படுகடன்களுக்கான வட்டி செலுத்துகைகள் = 29%
4. சமூக சேவைச் செலவுகள் = 30%

**ஒட்டுமொத்தமான அரச வரவு-செலவு நிலைமை**

2003 இன் ஒட்டுமொத்தமான அரச வரவு-செலவுப் பற்றாக்குறை மொ.உ.உ.யின் 8.0% வீதமாயிருந்தது. இது 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் நிலவிய மொ. உ. உ. யின் முறையே 10.8% மற்றும் 8.9% ஆகிய ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறையுடன் ஒப்பிடப் படுகின்றபோது குறைந்ததொரு மட்டமாகும். ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறை யென்பது, அரச வருமானத்தை விஞ்சிய அரச செலவுகளின் நிலையாகும். இந்த ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறையும் அது நிதியிடப்பட்ட விதமும் 9வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**2003 ஆம் ஆண்டில் வரவு-செலவுப் பற்றாக்குறை நிதியிடப்படுகின்றபோது ஒரு சில சாதகமான நிலைமைகளைக் காணக்கூடியதாயிருந்தது.**

(i) வரவு-செலவுப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு முடியுமாயிருந்ததன் காரணமாக 2003 இல் கடனில் தங்கியிருத்தல் குறைவடைந்தமை.

(ii) உள்நாட்டுக் கடன் வட்டியின் மீதான அழுத்தம் குறைவடைந்தமை. (வட்டி வீதம் குறைவடைந்ததன் காரணமாக)

(iii) கடன் கருவியில் கூடுதலாகத் தங்கியிருக்கக்கூடிய நிலைமையைக் காணக்கூடியதாயிருந்தமை.

(iv) வங்கித் துறைகளுக்கான படுகடன்கள் மீளச் செலுத்தப்பட்டமை.

ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறை 8.0% வீதம் வரை குறைவடைந்த போதிலும், 2003 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட 7.5% வீத மட்டத்தை விட அதிகமாயிருந்தது. இலக்கை அடைய முடியாதிருந்த போதிலும் செலவில் ஏற்பட்ட தீவிரக் குறைவின் காரணமாக வரவு-செலவுப் பற்றாக்குறையை 8% வீத மட்டத்திற்குக் (2002 ஆம் ஆண்டின் 8.9% மற்றும் 2001 ஆம் ஆண்டின் 10.8% வீதத்துடன் ஒப்பிடுகின்ற போது) குறைக்க முடியுமாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 வது புள்ளிவிபரக் குறிப்பு

**வரவு-செலவுப் பற்றாக்குறையும், பற்றாக்குறை நிதியிடப்பட்ட விதமும்**

| தலைப்பு | 2003 தற்காலிக (அ) |
|---|---|
| மொத்த வருமானம் | 276,516 |
| வரி வருமானம் | 231,648 |
| வரியல்லா வருமானம் | 44,868 |
| செலவுகளும் மீள் செலுத்துகைகளும் | |
| குறைக்கப்பட்டதன் பின்னரான கடன் வழங்கல்கள் | (417,671) |
| நடைமுறை | (334,693) |
| மூலதன மற்றும் தேறிய கடன் வழங்கல்கள் | (82,979) |
| நடைமுறைக் கணக்கின் மிகை (+) / பற்றாக்குறை (–) | –58,177 |
| முதனிலைக் கணக்கின் மிகை (+) / பற்றாக்குறை (–) | –16,029 |
| ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறை (அளிப்புகளுக்கு முன்னர்) | –141,155 |
| நிதியிடல் | 141,155 |
| **வெளிநாட்டு நிதியிடல்** | **51,021** |
| தேறிய கடன் பெறல் | 43,066 |
| அளிப்புகள் | 7,956 |
| **உள்நாட்டு நிதியிடல்** | **79,660** |
| சந்தையில் கடன் பெறல் | 79,830 |
| வங்கியல்லாத | 100,735 |
| வங்கிகள் | –20,905 |
| நிதி அதிகாரசபை | –28,559 |
| வர்த்தக வங்கிகள் | 7,654 |
| ஏனைய கடன் பெறுதல்கள் | –170 |
| **உள்நாட்டு அளிப்புகள்** | **250** |
| **தனியார்மயமாக்கல் பெறுகைகள்** | **10,223** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி – ஆண்டறிக்கை 2003

வட்டிச் செலவுகளை விட்டுக் கணிக்கப்படுகின்ற முதனிலைக் கணக்குப் பற்றாக்குறைக்கும் அரசிறை மற்றும் நடைமுறைச் செலவுகளுக்கும் இடையிலான வித்தியாசமாக விளக்கப்படுகின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை (அரச சேமிப்பின்மை) குறிப்பிடத்தக்களவு குறைத்துக் கொள்வதற்கு 2003 ஆம் ஆண்டில் இயலுமாயிருந்தது. 2003 ஆம் ஆண்டில் முதனிலைக் கணக்கின் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.9% வீதமாயிருந்ததோடு. நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 3.3% வீதமாயிருந்தது. இது 2000 ஆம் ஆண்டின் பின்னர் அறிக்கையிடப்பட்ட மிகக் குறைந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையாகும். (10 வது புள்ளிவிபரக் குறிப்பைப் பார்க்கவும்)

10 வது புள்ளிவிபரக் குறிப்பு

**முதனிலைக் கணக்குப் பற்றாக்குறையும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையும்**

**(மொ.உ.உ.%)**

| ஆண்டு | முதனிலைப் பற்றாக்குறை | நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை |
|---|---|---|
| 2000 | – 4.2 | – 3.4 |
| 2001 | – 4.1 | – 4.9 |
| 2002 | – 1.6 | – 4.4 |
| 2003 | – 0.9 | – 3.3 |

**நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் (அரச சேமிப்பின்மைகளின்) பொருளாதார விளைவுகள்**

- பொது நுகர்வுக்குக்கூட அரசாங்கம் கடன் பெறவேண்டி நேரிடுகின்றமை
- மூலதனச் செலவுகளுக்கான வளங்களை உருவாக்க முடியாதுள்ளமை
- அரச கடன்படு தன்மை அதிகரித்தல்
- வரவு-செலவுத் திட்டத்தின் மீது அழுத்தம் அதிகரித்து வரவு-செலவுப் பற்றாக்குறை அதிகரித்தல்
- பற்றாக்குறையை நிதியிடுவதற்கு பணவீக்க ரீதியிலான வழிகளின் மூலம் கடன் பெற வேண்டி நேரிடுவதால் நாட்டின் பணவீக்க வேகம் அதிகரித்தல்
- அரச நிதியியல் தொழிற்பாடுகள் பாதகமாயுள்ளதென்பதைக் காட்டக்கூடிய சுட்டெண்ணாக மாறுதல்.
- நாட்டின் மொத்த உள்நாட்டுச் சேமிப்புகள் குறைவடைவதற்குக் காரணமாயமைதல்.

வரவு-செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்குகளின் பற்றாக்குறை அண்மிய ஆண்டுகளில் 3% ~ 5% வீதத்துக்கு இடையிலான மட்டத்தை அறிக்கையிட்டுள்ளது.

**வரவு-செலவுப் பற்றாக்குறையை நிதியிடல்**

வரவு செலவுப் பற்றாக்குறையை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியியல் வழிவகைகளைப் பயன்படுத்தி நிவர்த்தி செய்யலாம். 2003 வரவு-செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்ற போது உள்நாட்டுச் சந்தையில் தங்கியிருத்தல் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது. அதாவது, உள்நாட்டுக் கடன் பெறுதல்கள் 2002 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8% வீதமாயிருந்ததோடு 2003 இல் 4.5% வீதம் வரை குறைவடைந்தது. இது 1997 இன் பின்னர் அறிக்கையிடப்பட்ட மிகக் குறைந்த மட்டமாகும். வரவு-செலவுப் பற்றாக்குறையை நிதியிடும் பொருட்டு பெறப்பட்ட தேறிய வெளிநாட்டு நிதியியல் வளங்கள் ரூபா 51 பில்லியனாயிருந்ததோடு இதில் ரூபா 8 பில்லியன் வெளிநாட்டு அளிப்புகளாயிருந்தது. இந்த அனைத்துக் கடன்களும் சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளின் கீழ் பெறப்பட்டுள்ளன. 2003 இல் வங்கி முறையிலிருந்தான கடன் பெறுதல்களை ரூபா 21 பில்லியனால் குறைத்துக் கொள்ள முடியுமாயிருந்தது. வரவு-செலவுப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு தனியார்மயமாக்கல் பெறுகைகள் ரூபா 13.5 பில்லியன் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2003 இல் ரூபா 10.2 பில்லியனையே பெறக்கூடியதாயிருந்தது.

**அரச படுகடன்கள்**

2003ஆம் ஆண்டில் நிவர்த்தி செய்யப்படாத அரச படுகடன் தொகை ரூபா 1864 பில்லியனாயிருந்தது. இதில் ரூபா 1020 பில்லியன் உள்நாட்டுக் கடன்களாயுள்ளதோடு, வெளிநாட்டுக் கடன்கள் ரூபா 844 பில்லியனாகும். 2003 மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக நோக்குகின்றபோது இது 105.9% வீதமாயிருந்த நிவர்த்தி செய்யப்படாத அரச கடன்கள் 2002 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 105.4% வீதத்துடன் ஒப்பிடுகின்ற போது சிறியதொரு அதிகரிப்பைக் காட்டுகின்றது. அரச படுகடன் தொகையைக் குறைத்துக் கொள்ளுதல் அரச நிதியியல் பொறுப்புக்கள் முகாமைத்துவச் சட்டத்தில் முன்னுரிமை வழங்குகின்றதொரு விடயமாகும்.

2003 ஆம் ஆண்டில் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (கடன் தவணைப் பணம், வட்டிக் கொடுப்பனவுகள்) ரூபா 345 பில்லியனாயிருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 19.6% வீதமாகும். இந்த படுகடன் பணிக் கொடுப்பனவுகள் மொத்த அரசிறையை விஞ்சியதாயுள்ளது. குறுகிய காலக் கடன்களை அதிக வட்டி வீதத்தில் பெற்றுக் கொள்வதே படுகடன் பணிக் கொடுப்பனவுகள் இவ்வளவு அதிகரிப்பதற்குக் காரணமாகும். அனைத்து அரச பொதுக் கொடுப்பனவுகளையும் செய்வதற்கு கடன் பெற வேண்டி நேரிடுதலும், அரச முதலீடுகள் குறைவடைந்து எதிர்கால வளர்ச்சி பாதிக்கப்படுதலுமே படுகடன் பணிக் கொடுப்பனவுகள் அதிகரிப்பதன் பொருளாதார விளைவுகளாயிருக்கும். இதனால் அரச கடன் முகாமைத்துவம் முக்கியமாயுள்ளதோடு இதன் பொருட்டு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 1950 இல் அரச படுகடன் முகாமைத்துவம் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டமை
- 1981 இல் திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாந்தரச் சந்தை உருவாக்கப்பட்டமை
- 1993 இல் மீள்கொள்வனவு கருமபீடம் திறக்கப்பட்டமை
- 1995 இல் நேர்மாற்று மீள்கொள்வனவு கருமபீடம் திறக்கப்பட்டமை
- 1997 இல் திறைசேரி முறிகள் வெளியிடப்பட்டமை
- 2001 இல் அபிவிருத்தி முறிகள் வெளியிடப்பட்டமை
- 2002 இல் அரச நிதியியல் முகாமைத்துவப் பொறுப்புக்கள் சட்டம் அங்கீகரிக்கப்பட்டமை
- 2004 இல் பத்திரங்களற்ற பிணையங்கள் முறை (SSSS), மத்திய வைப்பு முறை (CDS), அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை (RTGS) ஆகிய தொழில்நுட்ப முறைகள் அமுலாக்கப்பட்டமை.

## 3
## இலங்கையின் நிதியியல் துறை

2003 ஆம் ஆண்டில் இலங்கையின் நிதியியல் தொழிற்பாடுகளில் உயர் வளர்ச்சியொன்று உருவாகியது. அதாவது,

- பணவீக்கம் தொடர்ந்து குறைவடைந்தமை
- பணவீக்க எதிர்பார்ப்பு தாழ் மட்டத்தில் நிலவியமை
- அரச கடன் தேவை குறைவடைந்தமை
- வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலையாயிருந்தமை
- மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதம் குறைவடைந்தமை
- நிதியியல் முகாமைத்துவத்தை முன்னேற்றும் பொருட்டு மிகவும் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின்பால் கவனம் செலுத்தப்பட்டமை.
- சந்தை வட்டி வீதம் குறைக்கப்பட்டமை
- நிதிச் சந்தைத் தொழிற்பாடுகளின் கொடுப்பனவு இடர்நேர்வைக் குறைக்கும் பொருட்டும் வினைத்திறனை அதிகரிக்கும் பொருட்டும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை (RTGS) அறிமுகப்படுத்தப்பட்டமை
- பத்திரங்களற்ற பிணையங்கள் முறை (SSSS) 2004 இல் ஆரம்பிக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வர்த்தக வங்கிகளைப் பொறுத்தவரை பின்வரும் வளர்ச்சிகள் நடைபெற்றன.**

- **வர்த்தக வங்கிகளின் மூலதன நிதியத் தளம் முன்னேற்றப்பட்டமை**
- **முன்னெச்சரிக்கைத் தேவைகள் மேலும் பலப்படுத்தப்பட்டமை**
- **செயலிழந்த சொத்துக்கள் குறைவடைந்தமை**
- **பலவீனமான வங்கிகளில் நிலவிய வசதியின்மைகள் தளர்த்தப்பட்டமை**
- **தகவல்கள் மென்மேலும் வெளியிடப்பட்டமையின் ஊடாக நிதியியல் முறையின் நிலைப்பாட்டை வளர்ச்சியடையச் செய்தமை.**

நாணயக் கொள்கையைப் பொறுத்தவரை, (நாணயக் கொள்கை என்பது விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு அத்துடன் நிதியியல் முறையின் உறுதிப்பாடு ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பண நிரம்பல், கடன் வழங்கல், மற்றும் வட்டி ஆகியவற்றைச் சிறந்த முறையில் முகாமை செய்தலாகும்) பொருளாதாரத்தை நன்நிலைக்குக் கொண்டுவருவதைப் பலப்படுத்துவதே 2003 ஆம் ஆண்டின் நிதியியல் கொள்கையின் நோக்கமாயிருந்தது. பணவீக்க அழுத்தமொன்று ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கமாக முக்கியமான கொள்கை வட்டி வீதம் ஆண்டினுள் பல தடவைகள் குறைக்கப்பட்டன. அதேபோன்று நிதியியல் முகாமைத்துவத்தை சந்தையின்பால் இட்டுச் செல்வதை முன்னேற்றும் வகையில் தீவிர திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் 2003 மார்ச் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் ஒழிவுமறைவின்மையை அதிகரிக்கும் பொருட்டு மத்திய வங்கி நாணயக் கொள்கை தொடர்பான தகவல்களைச் சந்தைக்கு வழங்குவதை அதிகரித்துள்ளது.

### ஒதுக்குப் பணம், பண நிரம்பல், வங்கித் தொழில் மற்றும் விலை மட்டம்

2003 ஆம் ஆண்டில் பண நிரம்பல், ஒதுக்குப் பணம், வங்கித் தொழில் மற்றும் விலை மட்டத்தினுள் நடைபெற்ற மாற்றங்கள் தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு அதன் அடிப்படைப் பொருளையும் அண்மைக்கால அபிவிருத்தியையும் அறிந்திருப்பது முக்கியமாகும்.

### 1. பண நிரம்பல்

பண நிரம்பல் (Money Supply) என்பது, ஏதேனுமொரு தினத்தில் நாட்டிலுள்ள பணத் தொகையாகும். இலங்கை மத்திய வங்கியால் நான்கு பண நிரம்பல்களைப் பற்றிய தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

- குறுகிய பண நிரம்பல் ~ $M_1$
- விரிந்த பண நிரம்பல் ~ $M_2$
- திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ~ $M_{2b}$
- மிகவும் விரிவாக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ~ $M_4$ (மத்திய வங்கியானது $M_3$ பண நிரம்பல் தொடர்பான தகவல்களை வெளியிடுவதில்லை)

**குறுகிய பண நிரம்பல்** (Narrow Money Supply $M_1$) என்பது பொதுமக்களிடமுள்ள நாணயங்களினதும் பொதுமக்களுக்குரியதாயுள்ள கேள்வி வைப்புக்களினதும் கூட்டுத்தொகையாகும்.

#### விரிந்த பண நிரம்பல் ($M_2$)

குறுகிய பண நிரம்பலுடன் ($M_1$), பொதுமக்களுக்கு உரியதாக வர்த்தக வங்கிகளில் இருக்கும் தவணை மற்றும் சேமிப்பு வைப்புகளைக் கூட்டுவதன் மூலம் விரிந்த பண நிரம்பல் (M2) பெறப்படுகின்றது.

#### திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$)

குறுகிய பண நிரம்பலுக்கு ($M_1$), வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கிக் கூறுகளின் தொழிற்பாடுகளையும், வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகளின் உள்நாட்டுத் தொழிற்பாடுகளையும் சேர்ப்பதன் மூலம் திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) பெறப்படுகின்றது.

#### மிகவும் விரிவாக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ~ $M_4$

மிகவும் விரிவாக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_4$) என்பது, $M_{2b}$ பண நிரம்பலுடன் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களினதும் வைப்புகள் உள்ளடங்கிய பண நிரம்பலாகும்.

#### ஒதுக்குப் பணம் (Reserve Money) எனப்படும் அதி பலம்வாய்ந்த நாணயம் (High Powered Money)

ஒதுக்குப்பணம் என்பது மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற, பொதுமக்களிடமும் வர்த்தக வங்கிகளிடமும் உள்ள நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளையும் மத்திய வங்கியிடமுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்களையும் உள்ளடக்கியதான பணத்தொகையாகும்.

#### நாணயப் பெருக்கி (Money Multiplier)

**பண நிரம்பலுக்கும் ஒதுக்குப்பணத்திற்கும் இடையிலுள்ள தொடர்புக்கு நாணயப் பெருக்கி என** விளக்கமளிக்கப்படுகின்றது.

#### நாணயத்தின் வருமானச் சுற்றோட்ட வேகம் (Income Velocity of Money)

தேசிய வருமானத்தைப் பிறப்பிக்கின்றதான கொடுக்கல்வாங்கல்கள் நடைபெறுகின்றபோது நாணயக்கூறு கைமாறுகின்ற வேகத்தைப் பிரதிபலிக்கின்ற சுட்டெண்ணாகும்.

#### அடிப்படைக் கொள்கை வட்டி வீதம்

பிரதானமாக மூன்றாகும்.

1. **மீள் கொள்வனவு வீதம்** என்பது, வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் தமது மேலதிக நிதியங்களை மத்திய வங்கியிலுள்ள பிணையங்களில் முதலீடு செய்கின்றபோது செலுத்தப்படுகின்ற வட்டி வீதமாகும்.

2. **நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம்** என்பது, வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் அரச பிணையங்களை பிணையாக வைத்து மத்திய வங்கியிலிருந்து நிதியங்களைப் பெற்றுக் கொள்கின்றபோது அறவிடப்படுகின்ற கருவியாகும்.
3. **வங்கி வீதம்** என்பது, சந்தை வீதங்களின் திசையைக் காட்டுகின்ற வீதமாகும்.

#### தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் (Active Open Market Operation)

இற்றைவரையிருந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்குப் பதிலாக 2003 ஆம் ஆண்டில் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நிதியியல் இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு, மத்திய வங்கிக்கு சந்தைத் திரவத் தன்மையை மிகவும் வினைத் திறனுடன் நிருவகிப்பதற்கான இயலுமையை உருவாக்குதலே இம் முறையின் பிரதானமான நோக்கமாகும். இதன் மூலம் சந்தையின் பங்குபற்றுனர்கள் தமது திரவத் தன்மையை மிகவும் வினைத் திறனுடன் முகாமை செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டது.

பொருளாதாரத்தின் நாணயத் (மொத்தக் கடன்கள்) தொகையையும் அதன் செலவினத்தையும் (வட்டி வீதம்) மாற்றுவதன் மூலம் பொருளாதார மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டை அடைந்துகொள்ளுதல் நாணயக் கொள்கையின் இறுதி நோக்கமாகும். இதற்கான நாணயக் கொள்கைக் கருவியொன்றாக மத்திய வங்கியானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்துகிறது. 2003 மார்ச் மாதம் 03 ஆம் திகதி மத்திய வங்கியானது மிகத் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறையொன்றுக்கு மாறியது. இப் புதிய முறையின் பிரதானமான பண்புகள் மற்றும் இம் முறையிலுள்ள அனுகூலங்கள் யாவை என்பதைப் பற்றி சுருக்கமாக ஆராய்வோம்.

இப் புதிய முறையின் மூலம் நாணயச் சந்தையில் போட்டி நிலை ஊக்குவிக்கப்படுவதோடு, பங்கேற்பு நிறுவனங்களுக்கு தமது திரவத் தன்மை முகாமைத்துவத்தைச் சிறப்பாக மேற்கொள்வதற்குத் தேவையான தூண்டுதலும் அளிக்கப்படுகிறது. இம் முறையானது, நாணயக் கூட்டுக்களை இலக்காகக்கொண்ட நாணயக் கொள்கை வரையறை ஒன்றினுள் நடைமுறைப் படுத்தப்படுகிறது. ரூபா மிதக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து நாணயக் கொள்கையின் பெயரளவிலான துணையாக செலாவணி வீதம் தொடர்ந்தும் செயற்படாமையினால் நாணய இலக்குகள் மேலும் முக்கியத்துவம்வாய்ந்ததாக மாறியது. இக் கொள்கை வரையறையினுள் இறுதி இலக்கான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடானது விரிந்த பண நிரம்பலின் மீதான இலக்குகளின் ஊடாக அடைந்து கொள்ளப் படுவதோடு, இந்த இடைப்பட்ட இலக்கானது ஒதுக்குப்பணத்தின் மீதான நெறிப்படுத்தல் இலக்குகளோடு தொடர்புபடுத்தப்படுகின்றது. நாணயக் கொள்கைத் தீர்மானங்களின் தாக்கத்தை உடனடியாகப் பிரதிபலிக்கின்ற வங்கிகளுக்கிடையிலான ஒரு நாள் வட்டி வீதத்தை குறுகியதொரு வீச்சினுள் நிலையாகப் பேணிவருகின்ற அதேநேரம் இலக்காகக் கொள்ளப்பட்ட ஒதுக்குப்பணத்தை அடைந்துகொள்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இம்முறையிலுள்ள அடிப்படைப் பண்புகள் யாதெனில்,

i வட்டி வீத இடைவெளி
ii வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதத்தை வட்டி வீத இடைவெளியினுள் நிலையாகப் பேணிவரும் பொருட்டு மீள் கொள்வனவுக்கான அல்லது நேர்மாற்று மீள் கொள்வனவுக்கான ஏலவிற்பனையை நாளாந்தம் நடத்துதல்.
iii நிரந்தர (நிலையியல்) வசதிகள்
iv நீண்டகாலத் திரவத் தன்மையை வழங்குவதற்கு அல்லது உள்ளீர்த்துக் கொள்வதற்காக மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியின் தற்றுணிபின்படி அரச பிணைய ங்களைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல்.

**தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் அனுகூலங்கள்**

இம் முறையானது பங்கேற்பு நிறுவனங்களுக்கும் அதேபோன்று மத்திய வங்கிக்கும் சாதகமானதாகும். திறந்த சந்தை வசதிகள், நிருவாக ரீதியில் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதத்துக்குப் பதிலாக சந்தை வட்டி வீதங்களின் மீது வழங்கப்படுமாகையால் பங்கேற்பு நிறுவனங்களுக்கு இதன் மூலம் அனுகூலங்கள் கிடைக்கின்றன. சந்தை வட்டி வீதமானது வட்டி வீத இடைவெளியினுள் உள்ளதன் காரணத்தினால் முன்னைய முறையோடு ஒப்பீட்டுப் பார்க்கின்றபோது பங்கேற்பு நிறுவனங்களுக்கு அவர்களது மீள் கொள்வனவு வசதிகளுக்காக தற்போதுள்ளதை விடக் கூடுதலான வட்டி வீதமொன்று கிடைப்பதோடு நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகளுக்கு தற்போதுள்ளதை விடக் குறைந்த வட்டி வீதமொன்றைச் செலுத்த வேண்டி நேரிடுகின்றது. மேலும், பங்கேற்பு நிறுவனங்கள் தமது திரவத் தன்மை மதிப்பீடுகளை மிகவும் துல்லியமாகத் தயாரிப்பதற்கும் திரவத் தன்மை முகாமைத்துவ முறைகளை முன்னேற்றிக் கொள்வதற்கும் முயற்சிப்பார்களாதலால், சந்தை அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதைத் தொடர்ந்து வட்டி வீதங்களில் ஏற்படக்கூடிய தளம்பல்களையும் குறைத்துக்கொள்வதற்கு முடியுமாயிருக்கும். ஆதலால், பங்கேற்பு நிறுவனங்கள் தமது திரவத் தன்மை முகாமைத்துவத்தை முன்னேற்றிக்கொள்வதற்கு இம் முறையின் மூலம் ஊக்கமளிக்கப்படுவதால் அவர்கள் மேலதிக ஒதுக்குகளை வைத்திருத்தல் குறைக்கப்படுமென்பதோடு, இதன் மூலம் அவர்களது நிதியச் செலவினமும் குறைவடைகின்றது. நாணயக் கொள்கை உறுதிப்பாடு தொடர்பான சமிக்ஞைகளை வழங்குகின்ற வட்டி வீத இடைவெளியானது எப்போதும் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படுவதோடு, வட்டி வீத இடைவெளியை மாற்றுவதற்கு அல்லது மாற்றாதிருப்பதற்கு எடுக்கப்படும் தீர்மானமானது, அத் தீர்மானத்துக்கு அடிப்படையாய் அமைந்த நிலைமைகள் தொடர்பான கூற்றொன்றுடன் பொது மக்களின் பார்வைக்காக வெளியிடப்படும். இதன் மூலம் சந்தையில் பங்கேற்பவர்கள் அறிவூட்டப்படுவார்களென்பதோடு, இது நாணயக் கொள்கை உறுதிப்பாடு மாற்றப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பான மேலதிக ஊகங்களை இல்லாமல் செய்யும்.

இம் முறையின் கீழ் மத்திய வங்கியினால் சந்தைத் திரவத்தன்மை தீவிரமான விதத்தில் முகாமை செய்யப்படுகிறது. ஆதலால. நாணயக் கூட்டுக்களின் மீதான இலக்குகளை மிகவும் பயனுள்ள விதத்தில் அடைந்து கொள்வதற்கு முடியுமாயிருப்பதோடு, இதனூடாக இறுதி இலக்கான நாட்டின் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டை அடைந்துகொள்ள இயலுமாயிருக்கும்.

**மத்திய வங்கியை நவீனமயமாக்கல்**

நிதியியல் முறைமைகளில் அதிகரித்துவரும் சிக்கல் நிலைமையினாலும், மாற்றத்துக்குள்ளாகின்ற உலகினுள் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மத்திய வங்கிகளின் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பான புதுச் சிந்தனைகளின் காரணத்தினாலும் உலகம் பூராவுமுள்ள மத்திய வங்கிகள் மாற்றமுற வேண்டிய தேவை உருவாகியுள்ளது. இத் தேவையை உணர்ந்துள்ள இலங்கை மத்திய வங்கியானது, மத்திய வங்கி முறை பற்றிய புதிய அணுகுமுறைகளின்படி சென்று மீள் கட்டமைப்பிற்கும் இதன் மூலம் மேற்படி மாற்றங்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய ஆற்றலை அடைந்து கொள்வதற்குமான நவீன மயமாக்கல் வேலைத்திட்டமொன்றை 2000 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது.

**அடிப்படை நோக்கங்கள் மாற்றமடைதல்**

2002 திசெம்பர் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் திருத்தங்களின் மூலம் இலங்கையின் பயனுள்ள வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் இயலுமான விதத்தில் மத்திய வங்கியானது தனது நோக்கங்களுக்கு மீள வரைவிளக்கணமளித்ததோடு (அ) பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு: (ஆ) நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு ஆகிய புதிய இரண்டு நோக்கங்களையும் தேர்ந்தெடுத்தது. இந்த இரண்டு நோக்கங்களும் இற்றைவரை மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்ட பல்தரப்பு நோக்கங்களிலிருந்து மாறுபட்டவைகளாகும். இதன் மூலம் மத்திய வங்கி முறை பற்றிய சர்வதேச ரீதியில் பின்பற்றப்படுகின்ற மிகச் சிறந்த நடைமுறைகளின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை பிரதானமான துறைகளில் மாத்திரம் ஈடுபடுத்தக்கூடியதாயிருக்கும். புதிய அடிப்படை நோக்கங்கள் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து வங்கியினால் ஆற்றப்பட வேண்டிய ஒழுங்குமுறையாக்கல் மற்றும் முகாமைத்துவச் சீர்திருத்தங்கள் பின்வருமாறு:~

- அடிப்படை நோக்கங்களல்லாத தொழிற்பாடுகள் தொடர்பான அதிகாரத்தை ஒப்படைத்தல் (உதாரணமாக காசோலைகள் தீர்ப்பனவை லங்கா கிளியர் தனியார் கம்பனியிடம் ஒப்படைத்தல்.)
- புதிய கடமைப் பொறுப்புகளை மிகவும் வினைத் திறனுடனும் பயனுள்ள விதத்திலும் நிறைவேற்றுவதற்கான ஒழுங்கமைப்பு ரீதியிலான மாற்றங்களை உருவாக்குதல்.
- இதில் மனித மூலதன வளத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு புதிய மனித வளக் கொள்கைகளை உருவாக்குதல்.
- உரிய காலத்துக்கு முன்னர் ஓய்வு பெற விரும்புபவர்களுக்கு வெளியேறுவதற்கான பொறிமுறையொன்றை வழங்கும் பொருட்டு சுயமாக ஓய்வு பெறும் முறையொன்றை அமுலாக்குதல்.
- வங்கியின் புதிய மாற்றங்களுக்கு ஏற்புடையவாறான சட்ட ரீதியான திருத்தங்களை மேற்கொள்ளுதல்.

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்குமிடையிலான வேறுபாடு**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கி** என்பது, ஏனைய நிதியியல் பணிகளுடன் வாடிக்கையாளர்களுக்காக காசோலைகள் மூலம் பண அனுப்பீடுகளைச் செய்வதற்கும் வேண்டுகின்றபோது பணத்தை மீளப் பெறுவதற்கும் இயலுமான நடைமுறைக் கணக்குகளைப் பேணிவருவதற்கு இலங்கை மத்திய வங்கியால் உரிமப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள வங்கி நிறுவனமாகும். அதேபோன்று இவ் வங்கிகள் வட்டி செலுத்துகின்றதும் குறுகிய கால அறிவித்தலொன்றின் மூலம் பணத்தை மீளப் பெறவும் முடியுமான சேமிப்பு வைப்புக்கள் மற்றும் தவணை வைப்புக்களையும் பேணிவருகின்றன. வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகராகவும் செயற்படுகின்றது. **உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி** என்பது வங்கிச் சட்டத்தின் கீழ் சிறப்பியல்புவாய்ந்த வங்கித் தொழில் நடவடிக்கைகளைப் பேணிவருவதற்கு இலங்கை மத்திய வங்கியால் உரிமப் பத்திரம் பெற்றுள்ள நிதி நிறுவனமாகும்.

**விலைச் சுட்டெண்களும் பண வீக்கமும்**

பணவீக்கம் (Inflation) என்பது பணத்தின் கொள்வனவுச் சக்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பொது விலை மட்டத்தின் அதிகரிப்பாகுமென்பதோடு, இது வருடாந்தம் விலைச் சுட்டெண்களைப் பயன்படுத்திக் கணிப்பிடப்படுகின்ற பண வீக்க வேகத்தின் (Rate of Inflation) மூலமே அளவிடப்படுகின்றது. பணவீக்கமானது பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதாவது, பொருளாதாரத்தின் உண்மைத் துறையில், அரச நிதியியல் தொழிற்பாடுகளில், வெளிநாட்டுத் துறையில், நுகர்வில், முதலீட்டில், வேதனத்தில், தொழில் நிலையில், வருமானப் பரம்பலில், செலாவணி வீதத்தில், வட்டி வீதங்களில், சேமிப்பில் இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதன்படி பணவீக்கத்தைத் துல்லியமாகக் கணிப்பிடுதல் அவசியமாகின்றது. இதற்காக இலங்கையில் தற்போது அமுலிலுள்ள விலைச் சுட்டெண்களுக்கு மேலதிகமாக (11வது புள்ளிவிபரக் குறிப்பு) பண வீக்கத்தை உரிய விதத்தில் அளவிடுகின்ற, மிகவும் அர்த்தமுள்ள விலைச் சுட்டெண்ணாக முழு இலங்கையையும் உள்ளடக்கியதான "இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்" மேம்படுத்தப்பட்டுள்ளது. சுருக்கமாக, புதிய இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை ஏனைய விலைச் சுட்டெண்களோடு (அட்டவணையைப் பார்க்கவும்) பின்வருமாறு ஒப்பிடலாம்.

- புதிய இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது முழுப் பொருளாதாரத்தினதும் நுகர்வு விலையில் ஏற்படும் பண வீக்கத்தை அளப்பதற்கான யதார்த்தபூர்வமானதும், காலத்துக்கேற்றதுமான அளவீடொன்றை வழங்குகின்றது. இது தற்போதுள்ள ஏனைய நுகர்வோர் விலைச் சுட்டெண்களை விடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சுட்டெண் | அடிப்படைத் தகவலின் மூலம் | அடிப்படைக் காலம் | புவியியல் பிரதேசம் | வருமானத் தொகுதி | மாதிரி அளவு | நுகர்வு விடயங்களின் எண்ணிக்கை | விலைச்சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கொ.நு.வி..சு. | தொ.ம.பு.தி. குடும்ப வரவு-செலவு அளவீடு 1949/1950 | 1952 | கொழும்பு மாநகர சபை | மாத வருமானம் ரூ55-ரூ485 | 455 | 187 | 7 |
| பா.கொ.நு.வி..சு. | தொ.ம.பு.தி. தொழிற் படை மற்றும் சமூக பொருளாதார அளவீடு 1996/1997 | சன 1989 யூன் 1989 | பா.கொழும்புப் பகுதி | 40% குறைவானவை (செலவு) | 419 | 217 | 15 |
| கொ.மா.நு.வி.சு. | இ.ம.வ. நு. நிதி,சமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக் 1996 செப் 1997 | கொழும்பு மாவட்டம் | 40% குறைவானவை (செலவு) | 383 செ.கூ. | 197 | 11 |
| அநுராதபுரம் நு. வி. சு. | இ.ம.வ. நு. நிதி, சமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக் 1996 செப் 1997 | அநுராதபுரம் மாவட்டம் | 40% குறைவானவை (செலவு) | 119 செ.கூ. | 142 | 03 |
| மாத்தளை நு. வி. .சு. | இ.ம.வ. நு.நிதி சமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக்1996 செப்1997 | மாத்தளை மாவட்டம் | 40% குறைவானவை (செலவு) | 178 செ.கூ. | 176 | 06 |
| மேல் மாகாண நு. வி. சு. | இ.ம.வ. நு. நிதி, சமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக்1996 செப்1997 | மேல் மாகாணம் | 40% குறைவானவை (செலவு) | 1,932 செ.கூ. | 217 | 15 |
| இ. நு. வி. சு. (கிழக்கு மாகாணம் உட்பட) | தொ.ம.பு.வி.தி. வரவு செலவு அளவீடு | 1995 1997 | வட கிழக்கு | 65% குறைவானவை | 16031 செ.கூ. | 174 | 34 |
| | | 1996/1997 | மாகாணங்கள் தவிர நாடளாவிய ரீதியில் | 80% குறைவானவை | | | |

சிறந்ததொரு உள்ளடக்கத்தை வழங்குவதோடன்றி அவற்றின் பண வீக்க அளவீடுகளுடனும் பொருந்துவதாயுள்ளது.

- மாற்றமுறுகின்ற நுகர்வு முறையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதிலிருந்து விலகிச் செல்கின்றபோதுகூட பயன்படுத்தப்பட்ட கடந்த கால நுகர்வோர் விலைச் சுட்டெண்களைப் போலன்றி, ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு தடவை நிறையேற்றல்களைப் புதுப்பிப்பதற்காகவுள்ள நீண்டகாலத் திட்டமிடலின் கீழ், இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது நீண்டகாலம் அர்த்தபுஷ்டியுடன் நிலைத்திருக்கும்.
- தற்போதுள்ள நுகர்வோர் விலைச் சுட்டெண்களிலுள்ள பலவீனங்கள் மிகவும் நன்றாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள நிலைமையின் கீழ் புதிய இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் மக்களால் மிக விரைவில் வரவேற்கப்படக்கூடிய பண்புகளைக் கொண்டதாயுள்ளது.
- கொள்கை வகுப்போராலும் பொது மக்களாலும் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் வரவேற்கப்படுவதற்கான பரீட்சார்த்த காலம் (ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடம் வரை) முடிவடைந்ததன் பின்னர் ஏனைய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் வெளியிடப்படுவதிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.
- கடந்த காலங்களில் புதிய விலைச் சுட்டெண்கள் மக்கள் வரவேற்பைப் பெறாமை தொடர்பான நிராகரிப்பு அனுபவத்தின் கீழ் (உதாரணமாக, 1989 பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்) குடும்பங்கள், தொழில் முயற்சிகள், தொழில் அமைப்புக்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை வரவேற்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல் முக்கியமானதாயுள்ளது.

### வேதனச் சுட்டெண்கள்

பண்டங்கள் சந்தையில் விலை எவ்வளவு தூரத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளதோ அதேபோன்று காரணிச் சந்தையின் முக்கியமானதொரு துணைச் சந்தையான உழைப்புச் சந்தையில் வேதனம் முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. இதனை நாணய வேதனம் (Money Wages) மற்றும் உண்மை வேதனம் (Real Wages) என இரண்டு வகையாக ஆராயலாம்.

**நாணய வேதனம்** என்பது பண ரீதியாகக் கைக்குக் கிடைக்கின்ற வேதனமாகும். **உண்மை வேதனம்** என்பது நாணய வேதனத்தின் கொள்வனவுச் சக்தியாகும். உண்மை வேதனம் பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

$$\text{உண்மை வேதனம்} = \frac{\text{நாணய வேதனம்}}{\text{கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்}} \times 100$$

இலங்கையில் வேதனங்கள் தொடர்பான மாற்றங்கள் இரண்டு பிரதானமான பிரிவுகளின் கீழ் வருகின்றன. அதாவது, அரச துறை மற்றும் தனியார் துறை என்றவாறாகும். தனியார் துறை மீண்டும் , முறைசார் தனியார் துறை, முறைசாரா தனியார் துறை என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. 2003 ஆம் ஆண்டில் அரச துறையில் எவ்வித வேதனத் திருத்தங்களும் நடைபெறவில்லை. இதன்படி அரச துறையின் வேதனச் சுட்டெண் பெயரளவில் மாற்றமடையவில்லை. ஆயினும் உண்மை வேதனம் 3% - 6% க்கு இடைப்பட்ட வீதத்தில் வீழ்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 வது புள்ளிவிபரக் குறிப்பு

**ஆண்டுச் சராசரி விலை மாற்றங்கள் (%) : 1980 - 2003**

| ஆண்டு | கொ.நு. வி.சு. | பா.கொ நு.வி.சு. | கொ.மா. நு.வி.சு. | மொ.வி. வி.சு. | மொ.தே. உ.சு. | மொ.உ. உ.சு. |
|---|---|---|---|---|---|---|
| 1980 | 26.6 | ~ | ~ | 33.7 | 18.2 | 18.1 |
| 1981 | 18.0 | ~ | ~ | 17.0 | 20.6 | 20.6 |
| 1982 | 10.8 | ~ | ~ | 5.5 | 10.2 | 9.9 |
| 1983 | 14.0 | ~ | ~ | 25.0 | 14.7 | 14.6 |
| 1984 | 16.6 | ~ | ~ | 25.6 | 17.4 | 17.1 |
| 1985 | 1.5 | ~ | ~ | ~15.2 | 0.8 | 0.9 |
| 1986 | 8.0 | ~ | ~ | ~2.9 | 5.5 | 5.8 |
| 1987 | 7.7 | ~ | ~ | 13.4 | 6.8 | 6.5 |
| 1988 | 14.0 | ~ | ~ | 17.8 | 11.5 | 11.5 |
| 1989 | 11.6 | ~ | ~ | 9.0 | 9.7 | 9.6 |
| 1990 | 21.5 | 24.6 | ~ | 22.2 | 20.0 | 20.0 |
| 1991 | 12.2 | 11.5 | ~ | 9.2 | 11.2 | 11.0 |
| 1992 | 11.4 | 9.4 | ~ | 8.8 | 10.0 | 10.0 |
| 993 | 11.7 | 8.4 | ~ | 7.6 | 9.5 | 9.5 |
| 1994 | 8.4 | 4.8 | ~ | 5.0 | 9.4 | 9.3 |
| 1995 | 7.7 | 3.9 | ~ | 8.8 | 8.4 | 8.4 |
| 1996 | 15.9 | 14.7 | ~ | 20.5 | 12.2 | 12.1 |
| 1997 | 9.6 | 7.1 | 7.4 | 6.9 | 8.7 | 8.6 |
| 1998 | 9.4 | 6.9 | 7.3 | 6.1 | 8.4 | 8.4 |
| 1999 | 4.7 | 3.8 | 3.6 | ~0.3 | 4.4 | 4.4 |
| 2000 | 6.2 | 3.2 | 3.6 | 1.7 | 6.7 | 6.7 |
| 2001 | 14.2 | 11.0 | 10.3 | 11.7 | 12.4 | ~12.4 |
| 2002 | 9.6 | 10.6 | 6.8 | 10.7 | 10.7 | 8.4 |
| 2003 | 6.3 | 3.1 | 2.1 | 2.6 | 3.1 | 5.0 |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**முறைசார் தனியார் துறையில் திரண்ட குறைந்தபட்ச வேதனச் சுட்டெண் 2003 ஆம் ஆண்டில் 7% வீதத்தால் அதிகரித்தது. உண்மை வேதனம் 1% வீதத்தால் அதிகரித்தது.**

## 4

## வெளிநாட்டு வர்த்தகம்

வெளிநாட்டு வர்த்தகத்தின் கீழ் இலங்கையின் ஏற்றுமதித் துறை மற்றும் இலங்கையின் இறக்குமதித் துறையை வெவ்வேறாக ஆராயக்கூடியதாயுள்ளது. 2003 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் 9% வீதத்தால் அதிகரித்தது. 2002 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 4699 மில்லியனாக இருந்த ஏற்றுமதி வருமானம் 2003 ஆம் ஆண்டில் டொலர் 5133 மில்லியனாக அதிகரித்தது. இவ்வளர்ச்சியில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 80% வீதப் பங்களிப்பை வழங்கின.

இலங்கையின் ஏற்றுமதியைப் பிரதானமான நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 2003 ஆம் ஆண்டில் **இந்த நான்கு பிரிவுகளினதும் ஒப்பீட்டு முக்கியத்துவத்தை பின்வருமாறு காட்டலாம்.**

* கமத்தொழில் ஏற்றுமதிகள் 19%
* கைத்தொழில் ஏற்றுமதிகள் 77%
* வணிக ரீதியிலான ஏற்றுமதிகள் 4%
* வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள் 0%

கடந்த இருபத்தைந்து வருடங்களினுள் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை 4வது வரைபடக் குறிப்பு சுட்டிக் காட்டுகின்றது.

இதன்படி, இலங்கையின் பிரதானமான வர்த்தகப் பிரிவு, 77% வீதப் பங்களிப்பை வழங்குகின்ற கைத்தொழில் ஏற்றுமதியாகும். இதில் 50% வீதம் புடவைகளும் ஆடைகளுமாகும். ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளிடையே இயந்திரங்களும் உபகரணங்களும், வைரம் மற்றும் நகைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு பானங்கள், புகையிலை போன்றவை முக்கியமான இடத்தை வகிக்கின்றன. 1977 இல் சுதந்திர சந்தைப் பொருளாதாரம் அறிமுகப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இலங்கையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவு விரிவடையத் தொடங்கின. இதன் பெறுபேறாக 1986 ஆகின்றபோது கமத்தொழில் ஏற்றுமதித் துறையைத் தாண்டிச் சென்று பிரதானமான ஏற்றுமதித் துறையாக கைத்தொழில் ஏற்றுமதித் துறை மாறியது. 1977 ஆம் ஆண்டில் 14% வீதமாக இருந்த கைத்தொழில் ஏற்றுமதி 2003 இல் 77% வீத அதிகூடிய வீதமொன்றைக் காட்டியதோடு கடந்த தசாப்தத்தினுள் இதன் பங்களிப்பு 75% வீத மட்டத்தில் இருந்தது. இக் காலகட்டத்தினுள் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஒப்பீட்டு முக்கியத்துவம் கைத்தொழில் ஏற்றுமதியினுள் 65% ~ 68% வரை இருந்தது. எஞ்சிய நாற்றுவீதங்கள் ஒருசில கைத்தொழில் துறைகளுக்குப் பகிர்ந்து சென்றன. எவ்வாறாயினும், மொத்தக் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 2/3 பங்கைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதி முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் பல உள்ளன.


- கைத்தொழில் நாடுகளில் (அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள்) நிலவுகின்ற குறைந்த கேள்வி.
- உப சகாரா வலயத்தில் உருவாகி வருகின்ற ஆடை உற்பத்தியாளர்களால் (அமெரிக்காவின் தீர்வை வரிச் சட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6வது வரைபடக் குறிப்பு

**முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் 1977**




கீழ் அமெரிக்காவினுள் நுழைவதற்கு அனுமதி பெற்றுள்ள) விடுக்கப்படுகின்ற போட்டி நிலை. அவர்களுக்கு இலாபகரமான உழைப்பு கிடைப்பதால் இச் சவால் கடுமையானதாக உள்ளது.

- இலங்கை ஆடை ஏற்றுமதி செய்கின்ற அளவை விட தங்கி வாழும் நிலை அதிகமாயுள்ளதால் (மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ 50% வீதம்) 2005 ஆம் ஆண்டாகின்றபோது படிப்படியாக பல் இழைய உடன்படிக்கையிலிருந்து (Multi Fiber Agreement) நீக்கப்படுவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதகமான நிலை.
- இலங்கையின் ஆடைகள் சந்தை அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் மாத்திரம் மட்டுப் பட்டுள்ளதால் அந் நாடுகளின் பொருளாதார அதிர்ச்சி நிலை இலங்கையின் ஆடைகள் சந்தையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துதல்.

இலங்கையின் ஆடைகள் ஏற்றுமதியில் 90% வீதமானவை முதலீட்டுச் சபை (BOI) நிறுவனங்களின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைக்கின்றன.

கமத்தொழில் ஏற்றுமதிகள் 2003 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதிகளில் 14% வீதமாயிருந்தன. 1993 ஆம் ஆண்டில் இலங்கையின் கமத்தொழில் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதியில் 23% வீதமாயிருந்நதோடு, அதன் ஒப்பீட்டு முக்கியத்துவம் கடந்த தசாப்தத்தினுள் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகின்றது. கமத்தொழில் ஏற்றுமதிகளில் 70% வீதம் தேயிலை ஏற்றுமதியாகும். கடந்த தசாப்தத்தினுள் சிறு கமத்தொழில் ஏற்றுமதிகளில், குறிப்பாக கறுவா, பதப்படுத்தப்படாத புகையிலை, மிளகு, கிராம்பு, மரக்கறி, பழங்கள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டதோடு, இதன் ஒப்பீட்டு முக்கியத்துவம் இறப்பர் மற்றும் தெங்கு ஏற்றுமதிகளின் முக்கியத்துவத்தைத் தாண்டிச் சென்றுள்ளது.

இறக்குமதிகளின் உள்ளமைப்பை பிரதானமான நான்கு பிரிவுகளாகப் பிரித்துக் காட்டலாம்.

- நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதி, உதாரணமாக: அரிசி, சீனி, கோதுமை
- இடைநிலைப் பண்டங்களின் இறக்குமதி, உதாரணமாக: பெற்றோலியம், புடவைகள், உரம், இரசாயனப் பொருட்கள்
- முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி, உதாரணமாக: இயந்திரங்களும் உபகரணங்களும், போக்குவரத்துக் கருவிகள், கட்டடவாக்கப் பொருட்கள்
- வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்.

2003ஆம் ஆண்டில் இலங்கையின் இறக்குமதிகளின் உள்ளமைப்பில் நுகர்வுப் பொருட்கள் இறக்குமதியின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 22% வீதமாயிருந்ததோடு, இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியும் முறையே 57% வீதமாகவும் 20% வீதமாகவும் இருந்தது. 1977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் சுதந்திர சந்தைப் பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து நோக்குகின்றபோது கடந்த 25 வருட காலத்தினுள் இலங்கையின் இறக்குமதிகளின் உள்ளமைப்பானது நுகர்வுப் பொருட்கள் இறக்குமதியிலிருந்து இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியை நோக்கி நகர்ந்துள்ளது. இதற்கான பிரதானமான காரணம் யாதெனில், அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்களின் நிரம்பல் அதிகரித்தமையாகும். மறுபுறம், கைத்தொழில் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிக் கேள்வியை அதிகரிப்பதற்கு ஏதுவாயிருந்ததோடு, உட்கட்டமைப்பு வசதிகள், கட்டடவாக்கம் மற்றும் தொழில் நுட்பத் துறைகளின் வளர்ச்சி ஆகியன முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பதற்குக் காரணமாயமைந்தது. 2003 இல் இலங்கையின் இறக்குமதிகளின் உள்ளமைப்பு 12வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### வர்த்தகத்தின் போக்கு

2003 இல் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தின் வர்த்தகப் போக்கினுள் (Trade Direction) ஒருசில குறிப்பிடத்தக்க பண்புகளைக் காணக்கூடியதாயுள்ளது.

12 வது புள்ளிவிபரக் குறிப்பு
**இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பு**

| பொருட்கள் | மொத்த இறக்குமதியில் % |
|---|---|
| **A நுகர்வுப் பொருட்கள்** | **22%** |
| • உணவு பான வகைகள் (அரிசி, சீனி,மாவு, பால் உற்பத்திகள்) | (11%) |
| • ஏனைய நுகர்வுப் பொருட்கள் (மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள், வானொலி, தொலைக் காட்சி) | (11%) |
| **B இடைநிலைப் பொருட்கள்** | **57%** |
| • பெற்றோலியம் | (13%) |
| • புடவைகள் | (21%) |
| • ஏனையவை (உரம், இரசாயனப் பொருட்கள், நிற வகைகள், கோதுமை, விதை) | (23%) |
| **C முதலீட்டுப் பொருட்கள்** | **20%** |
| • கட்டடவாக்கப் பொருட்கள் | (5%) |
| • போக்குவரத்துக் கருவிகள் | (3%) |
| • இயந்திரங்களும் உபகரணங்களும் | (10%) |
| • ஏனையவை | (2%) |
| **D வகைப்படுத்தப்படாதவை** | |
| **மொத்த இறக்குமதிகள் (A+B+C)** | **100** |

- கைத்தொழில் நாடுகள் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பிரதானமான சந்தைகளாக மாறி 70% வீத சந்தைப் பங்களிப்பைக் காட்டியமை.
- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தைக்கான பங்களிப்பு 25% வீதமாயிருந்தமை.
- கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையின் பங்களிப்பு 4% வீதமாயிருந்தமை.
- இலங்கைக்குக் கூடுதலாகப் பொருட்களை இறக்குமதி செய்த நாடுகளிடையே ஆசிய நாடுகளின் பங்களிப்பு 56% வீதமாயிருந்தமை.
- சார்க் நாடுகள் மொத்த ஏற்றுமதியில் 7% வீதப் பங்களிப்பையும், இறக்குமதியில் 18% வீதப் பங்களிப்பையும் வழங்கியமை.
- 1979 இல் இருந்து இலங்கையின் பிரதானமான பாரிய கொள்வனவாளராக 83% வீதப் பங்களிப்புடன் அமெரிக்கா விளங்கியமையும், இதில் 35% வீதம் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதியாய் இருந்தமையும்.
- பிராந்திய இரு தரப்பு மற்றும் பல்தரப்பு வர்த்தகத் தொடர்புகளைப் பலப் படுத்துவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை.

## 5

## சென்மதி நிலுவையும் வெளிநாட்டு நிதியியல் எண்ணக்கருவும்

**2003 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பின்வருமாறு சுருக்கிக் காட்டலாம்.**

- **வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்தமை.**
- நடைமுறைக் கணக்கின் நிலுவை குறைவடைந்தமை
- மூன்றாவது ஆண்டிலும் சென்மதி நிலுவையில் மிகை உருவாகியமை.
- நிதியியல் மற்றும் மூலதன வரவுகள் அதிகரித்தமை
- வெளிநாட்டுப் போட்டி நிலை அதிகரித்தமை
- வர்த்தக வீதம் அனுகூலமாயிருந்தமை
- வெளிநாட்டுக் கடன் பணிகள் வீதம் வீழ்ச்சியடைந்தமை
- வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை வளர்ச்சியடைந்தமை.

2003 இல் ஒட்டுமொத்தமான சென்மதி நிலுவை ஐக்கிய அமெரிக்க டொலர் 502 மில்லியன் மிகையை அறிக்கையிட்டது. இது 1993 இன் பின்னர் அறிக்கையிடப்பட்ட ஆகக் கூடுதலான மிகையாகும். 2003 ஆம் ஆண்டின் சென்மதி நிலுவை ஆவணத்தின் சுருக்கம் 13 வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. சென்மதி நிலுவையின் பண்டங்கள் கணக்குக்குரிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பாக ஏற்கனவே ஆராயப்பட்டது. அதன் ஏனைய கணக்குகளுக்குரியவை தொடர்பாகச் சுருக்கமாக ஆராய்தல் பயனுள்ளதாயிருக்கும்.

13 வது புள்ளிவிபரக் குறிப்பு
**இலங்கையின் சென்மதி நிலுவை 2003**

| தலைப்பு | பெறுமதி (அமெரிக்க டொலர் மில்லியன்) |
|---|---|
| **A பொருட்கள் கணக்கு** | |
| 1. ஏற்றுமதி | 5133 |
| 2. இறக்குமதி | (6672) |
| 3. சந்தை நிலுவை (1-2) | (1539) |
| **B பணிகள் கணக்கு** | |
| 4. பெறுகைகள் | 144 |
| 5. கொடுப்பனவுகள் | 336 |
| 6. பணிகள் கணக்கின் தேறிய நிலுவை (4-5) | (192) |
| **C வருமானக் கணக்கு** | |
| 7. பெறுகைகள் | 144 |
| 8. கொடுப்பனவுகள் | 336 |
| 9. வருமானக் கணக்கின் தேறிய நிலுவை(7-8) | (192) |
| **D பொருட்கள், பணிகள், வருமானம் (தேறிய) (A+B+C)** | (1335) |
| **E நடைமுறை மாற்றல்கள் கணக்கு** | |
| 10. தனியார் மாற்றல்கள் (தேறிய) | 1205 |
| 11. அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 29 |
| 12. நடைமுறை மாற்றல்கள் நிலுவை (10-11) | 1176 |
| **F நடைமுறைக் கணக்கின் நிலுவை (D+12)** | |
| **G மூலதனக் கணக்கு** | |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | |
| **நிதியியல் கணக்கு** | 641 |
| (வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தனியார்மயமாக்கல் பெறுகைகள்) | |
| தனியார் நீண்டகாலக் கடன்கள் (தேறிய) | |
| அரச நீண்டகாலக் கடன்கள (தேறிய) | |
| குறுகியகாலக் கடன்கள் (தேறிய) | |
| **H மொத்த நிலுவை (F+G+H)** | + 502 |
| **I நாணய மாற்றம்** | - 502 |

### சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கு

சென்மதி நிலுவை ஆவணத்தில் பொருட்கள் கணக்குக்கு உரியதாயுள்ள ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் தொடர்பாக மேலே கலந்துரையாடப்பட்டது. சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கில் 6 துறைகள் உள்ளடங்குகின்றன.

* போக்குவரத்து
* சுற்றுலா
* தொலைத்தொடர்பு
* காப்புறுதிச் சேவை
* ஏனைய வியாபாரப் பணிகள்
* வேறு எதிலும் குறிப்பிடப்படாத அரச செலவுகள்

### சென்மதி நிலுவையின் வருமானக் கணக்கு

வருமானக் கணக்கில் முக்கியமாக, ஊழியர் கொடுப்பனவுகள், நேரடி முதலீடுகள், வட்டி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உள்ளடங்குகின்றன. இதில் ஊழியர் கொடுப்பனவுகளின் கீழ் ஊழியர்களுக்கான வேதனங்கள் மற்றும் மதியுரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டணங்கள் உள்ளடங்குகின்றன. அதாவது, வெளிநாட்டுத் தூதரகங்களின், சர்வதேச அமைப்புக்களின் பணிகள் மற்றும் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளாகும்.

**நடைமுறை மாற்றல்கள்**

இதில் பிரதானமாக நடைமுறை தனியார் மாற்றல்கள் மற்றும் நடைமுறை அலுவல்சார் மாற்றல்கள் ஆகிய இரண்டு விதமான மாற்றல்களும் உள்ளடங்குகின்றன. இங்கு, தனியார் மாற்றல்கள் என்பது, வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்கள் இந் நாட்டுக்கு அனுப்பி வைக்கின்ற வெளிநாட்டுப் பண அனுப்பல்களாகும்.

**சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு**

பொருட்கள் கணக்கு, பணிகள் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் நடைமுறை மாற்றல்கள் கணக்குகளின் தேறிய நிலுவைகளின் கூட்டுத் தொகையை சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை எனக் குறிப்பிடுகிறோம். நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையானது, மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளின் மிகையிலிருந்தே நிவர்த்தி செய்யப்படுகிறது.

**சென்மதி நிலுவையின் மூலதன மற்றும் நிதியியல் கணக்கு**

இது பிரதானமாக இரண்டு வகைப்படுகின்றது. ஒன்று மூலதனக் கணக்காகும். இதில் மூலதன மாற்றல்கள் உள்ளடங்குகின்றன. அதாவது, அரசாங்கம் கருத்திட்டங்களுக்காகப் பெற்றுள்ள மாற்றல்களும், வெளிநாடுகளில் வசிப்பதற்குச் சென்றுள்ளவர்கள் (புலம் பெயர்ந்தோர்) காணி, சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறுகின்ற பெறுகைகளைப் போன்று, அவர்கள் புதிதாக வசிப்பதற்குச் சென்றுள்ள நாடுகளில் செய்கின்ற மாற்றல்களும் உள்ளடங்குகின்றன.

**மூலதனக் கணக்கைத் தளர்த்துதல்**

மூலதனக் கணக்கு தளர்த்தப்பட வேண்டுமா? இல்லையா? என்பது நீண்டகாலமாக விவாதத்துக்கு உள்ளாகியிருந்ததொரு விடயமாகும். எவ்வாறாயினும், இலங்கை ஏற்கனவே மூலதனக் கணக்கை ஓரளவு திறந்து விட்டுள்ளது. வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் (NRFC) பேணிவருவதற்கு வர்த்தக வங்கிகளுக்கு வாய்ப்பளித்துள்ளமை, வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகளை (FCBUs) நிறுவுவதற்கு வாய்ப்பளித்துள்ளமை, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குப் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளால் (Quoted Companies) வெளியிடப்பட்டுள்ள பங்கு மூலதனத்தில் 40% தொடக்கம் 100% வீதம் வரை முதலீடு செயவதற்கு அனுமதியளித்துள்ளமை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்கின்றபோது விதிக்கப்பட்ட 100% வீத கையளிப்பு வரி இரத்துச் செய்யப்பட்டமை, பங்குச் சந்தையில் வெளிநாட்டு மூலதனத்தை இலகுபடுத்தும் பொருட்டு "பங்கு முதலீடு தொடர்பான வெளிவாரி ரூபாக் கணக்கை" (SIERA) பேணிவருவதற்கு அனுமதி அளித்துள்ளமை, வர்த்தக வங்கிகளுக்கு அவர்களது மூலதன மற்றும் ஒதுக்குப்பணப் பெறுமதியில் 15% வீதம் வரை வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு அனுமதியளித்துள்ளமை, இலங்கை அபிவிருத்தி முறிகளை (டொலர் முறிகள்) வெளியிட்டமை, நேரடி வெளிநாட்டு முதலீட்டுக் கட்டுப்பாடுகளை குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் முழுமையாகவே நீக்கியமை, போன்றவற்றை மூலதனத் தளர்வுச் செயற்பாடுகளாகச் சுட்டிக்காட்டலாம். ஆயினும், இன்னமுமே தனியார் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்ளுதல், வதிவுடையோர் வெளிநாடுகளில் முதலீடு செய்தல், தனியார் துறையால் வெளியிடப்படுகின்ற கம்பனித் தொகுதிக் கடன்களிலும், முறிகளிலும் வதிவற்றோர் முதலீடு செய்தல் ஆகியன கட்டுப் படுத்தப்பட்டுள்ளன.

மூலதனக் கணக்கு முழுமையாகவே திறந்து விடப்படுதலானது உள்நாட்டு நிதியியல் துறையின் அபிவிருத்தியின் பொருட்டு சந்தையை ஊக்குவிப்பதற்கும், ஒழுக்கமான பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தை ஏற்படுத்து வதற்கும், மூலதனம் சுதந்திரமாக நாடுகளுக்கிடையே பரிமாறப்படுவதற்கும், மேலதிக சேமிப்புக்களை நிதியிடுவதற்கும் உதவுவ தாயிருக்கும்.

ஆயினும், மூலதனக் கணக்கை முழுமையாகவே திறந்து விடுவதற்கு எதிர்பார்க்கின்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் (இலங்கையைப் போன்ற) அதனைத் திறந்து விடுவதற்கு முன்னர் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துதலும், போட்டி ரீதியிலானதும், வினைத் திறனுடன்கூடியதுமான நிதியியல் முறைமை யொன்றை ஏற்படுத்துதலும் இரண்டு பூர்வாங்கத் தேவைகளாகுமென்பதைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

**வெளிநாட்டு நிதியியல் எண்ணக்கரு**

**ஒட்டுமொத்தமான நிலுவையும் அலுவல்சார் ஒதுக்குகளும்**

இலங்கையின் சென்மதி நிலுவையின் இறுதி நிலுவை மொத்த நிலுவையாகும். வேறு விதத்தில் கூறுவதென்றால், வெளிநாட்டுக் கணக்குகளின் சீராக்கத்தின் பொருட்டு தேறிய அலுவல்சார் ஒதுக்குகளின் மாற்றமுறும் அளவுகளின் மூலம் காட்டப்படுவது மொத்த நிலுவையாகும். மொத்த நிலுவையில் பற்றாக்குறை ஏற்படுகின்றபோது இத் தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைகின்றன. மொத்த நிலுவையில் மிகையொன்று ஏற்படுமிடத்து இத் தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரிக்கின்றன.

அரசாங்கத்திற்கும் (அரச முகவராண்மைகள் உட்பட) மத்திய வங்கிக்கும் உரித்தாகவுள்ள வெளிநாட்டுச் சொத்துக்களின் தேறிய பெறுமதியே தேறிய அலுவல்சார் ஒதுக்குகளாகக் குறிப்பிடப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டில் தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்தன. 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் அலுவல்சார் ஒதுக்குகள் வளர்ச்சியடைந்தன. 2003 ஆம் ஆண்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் பெறுமதி அமெரிக்க டொலர் 2329 மில்லியனாயிருந்தது. தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் சிறப்பாய மைவதன் மூலம் பல பொருளாதார அனுகூலங்கள் கிடைக்கின்றன. நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதி மீது நம்பிக்கை அதிகரித்தல், நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி மீது நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்படல், வெளிநாட்டுக் கடன்களைப் பெறுதல் குறைவடைதல், நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்ய வேண்டி நேரிடாமை, ஏற்றுமதியாளர்கள் தாம் உழைத்த வருவாயை நாட்டிற்குள் கொண்டுவருவதைத் துரிதப்படுத்துதல் ஆகியனவாகும். எவ்வாறாயினும் 2003 ஆம் ஆண்டில் அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்குப் பல காரணிகள் ஏதுவாயமைந்தன.

- அரசியல் உறுதிப்பாடு
- சமாதானச் செயற் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டமை
- அண்மிய கடன் வசதிகளின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடன் பெறுதல்
- ரூபா சுதந்திரமாக மிதக்கவிடப்படல்
- ஐக்கிய அமெரிக்க டொலரை அடிப்படையாகக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளியிடப்படுதல்
- தனியார் பண அனுப்பல்கள், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்தல்

ஒரு நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் முக்கியத்துவத்தை அளவிடுகின்ற அளவுகோல் யாதெனில், அச் சொத்துக்களின் மூலம் கொள்வனவு செய்யக்கூடிய இறக்குமதி மாதங்களாகும். இதனை மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதிச் சாத்தியம் எனவும் குறிப்பிடுகிறோம். 2003 இல் இலங்கையில் இருந்த மொத்த அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்களின் தொகை 2004 இல் 4.2 மாத இறக்குமதிக்கு நிதியிடக்கூடிய அளவுக்குப் போதுமானதாயிருந்தது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் (மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், வர்த்தக வங்கிகளுக்கு உரியதாயுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள்) 5.8 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கே போதுமானதாயிருந்தது.

**வெளிநாட்டுக் கடன் பணிகள் வீதம்**

வெளிநாட்டுக் கடன் பணிகள் வீதம் என்பது, வெளிநாட்டுக் கடன் தவணைத் தொகைகளையும் அதற்குரிய வட்டியையும் அதாவது, வெளிநாட்டுக் கடன் பணிகளை வெளிநாட்டு வருவாய்களின் நூற்று வீதமாகக் காட்டுதலாகும். இங்கு வெளிநாட்டு வருவாய்கள் என்பதில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதி வருவாயைப் போன்றே பொருட்கள், பணிகள் வருமானம் மற்றும் தனியார் மாற்றல்களின் மூலமான வருவாயையும் சேர்த்துக் கொள்ளலாம். பொருட்கள், பணிகள் வருவாய்களின் நூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதமாக நோக்கப்படுகின்றபோது, 2003 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் பணிகள் வீதம் 11.6% வீதமாயிருந்ததோடு, பொருட்கள் பணிகள் வருமானம் மற்றும் தனியார் மாற்றல்கள் வருவாயின் நூற்று வீதமாக நோக்கப் படுகின்றபோது 9.3% வீதமாகும். மொத்தக் கடன் தொகையில் மிகக் கூடுதலான அளவு சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளின் கீழ் பெறப்பட்டுள்ளதால், இன்றுள்ள கடன் பணிகள் பிரச்சினையாயிராத போதிலும், சலுகை ரீதியிலல்லாத கடன் அதிகரிக்கக்கூடிய போக்கானது பிரதானமான இரண்டு தேவைகளை மேலெழுப்புகின்றது. ஒன்று, முன்னெச்சரிக்கைக் கடன் முகாமைத்துவக் கொள்கையின் தேவையாகும். மற்றையது, வினைத் திறனுடன் கூடியதான வளப் பகிர்வின் தேவையாகும்.

**வெளிநாட்டுச் செலாவணி வீதம்**

உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியானது வெளிநாட்டுச் செலாவணி வீதமாகப் பொருள்கொள்ளப்படுகிறது. 2002 ஆம் ஆண்டின் 3.7% வீதப் பெறுமதி வீழ்ச்சியுடன் ஒப்பிடுகின்றபோது ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி மிகவும் சிறிய அளவில், அதாவது 0.01% வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுப் பணவீக்கம் குறைவடைந்ததன் காரணமாக உண்மை விளைவுச் செலாவணி வீதம் (5 நாணய வகைகளின்) 2.8% வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**2003 இல் இலங்கைப் பொருளாதாரத்தின் பிரச்சினைகள், சவால்கள், இடர்நேர்வுகள்**

**(அ) பிரச்சினைகள்**

- பரவலாகக் காணக்கூடியதாயுள்ள வறுமை
- உயர் மட்ட உள்ளமைப்பு ரீதியிலான தொழிலின்மை மற்றும் குறை தொழில் நிலையில் தொழில்புரிவோர் அதிகரித்தல்
- ஒப்பீட்டளவிலான உயர் பணவீக்கம்
- போதிய பொருளாதார வளர்ச்சியின்மை
- தாழ் மட்டத்திலுள்ள முதலீட்டு வீதமும் சேமிப்பு வீதமும்.
- உயர் மட்டத்திலுள்ள வரவு~செலவுப் பற்றாக்குறை
- கடன் பழுவை அதிகரிக்கச் செய்கின்ற வரவு~ செலவுப் பற்றாக்குறை
- மந்த கதியிலான பொருளாதார சீர்திருத்தங்கள்
- நிதியியல் துறையின் மெதுவான வளர்ச்சி

**(ஆ) சவால்களும் இடர்நேர்வுகளும்**

- சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லுதலும் நிலையான சமாதானத்தை அடையப்பெறுதலும்
- உள்ளமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களைத் துரிதப்படுத்துதல்
- சட்டத்தையும் அமைதியையும் பேணுதலும் உறுதி செய்தலும்
- அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துதலும் நல்லாட்சி நடத்துதலும்
- வெளிநாட்டு உதவிகளைப் பயனுள்ள விதத்தில் பிரயோகித்தல்
- வெளிவாரியான பொருளாதாரச் சூழலுடனும் உலகமயமாக்கலுடனும் ஒன்றிணைதல்
- 7% வீத பொருளாதார வளர்ச்சியை அடையப்பெறுதல்
- நீடித்து நிலைத்திருக்கக்கூடிய உயர் தரத்திலான நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தை இடுதல்
- பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தைப் பலப்படுத்துதல்
- காலநிலை.

**2003 பொருளாதாரக் கொள்கைகளின் போக்குகள்**

இதன் கீழ்

- நாணயக் கொள்கை
- அரச நிதியியல் கொள்கை
- நிதித் துறைக் கொள்கை
- வெளிநாட்டுத் துறைக் கொள்கை ஆகிய கொள்கைகளின் போக்குகள் மட்டும் ஆராயப்படும்.

**நாணயக் கொள்கை நடவடிக்கைகள்**

- மத்திய வங்கி மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 2003 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முறையே 9.75% வீதமாகவும் 11.75% வீதமாகவும் இருந்ததோடு 2003 ஆம் ஆண்டின் இறுதியாகின்ற போது 7.0% வீதமாகவும் 8.5% வீதமாகவும் முறையே அடிப்படை இலக்கம் 275 மற்றும் 325 ஆல் குறைவடைந்தமை.
- திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் இரண்டாந்தரக் கழிவு வீதம் மற்றும் முதனிலைச் சந்தை விளைவு வீதத்துக்கு இடையிலான எல்லை, ஆண்டின் ஆரம்பத்தில் அடிப்படை இலக்கம் 125 இல் இருந்து ஆண்டின் இறுதியா கின்ற போது அடிப்படை இலக்கம் 5 வரை குறைக்கப்பட்டமை.
- தீவிர திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டமை.
- நியதி ஒதுக்கு வீதம் (SRR) கணிக்கப்படுகின்ற முறை திருத்தப்பட்டமை
- மத்திய வங்கி வட்டி வீதம் 18% இல் இருந்து 15% வரை குறைக்கப்பட்டமை.
- மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்க்கும் நோக்கத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் தமது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் பொருட்டு தனது பிணையங்கள் வெளியிடப்பட்டமை.

**அரச நிதியியல் கொள்கை நடவடிக்கைகள்**

- 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரச நிதியியல் முகாமைத்துவப் பொறுப்புக்கள் சட்டம் அமுலாக்கப்படுதல் ஆரம்பிக்கப்பட்டமை.
- பங்களிப்பு ஓய்வூதிய நிதியச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஊழியர் சேம நிதியம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியச் சட்டமாக ஊழியர் சேம நிதியச் சட்டம் திருத்தப்பட்டமை.
- உழைப்புச் சந்தையில் நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தும் பொருட்டு தொழில் கட்டளைச் சட்டங்கள் திருத்தப்பட்டு அமுலாக்கப்பட்டமை.
- நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபை நிறுவப்பட்டமை.
- தனியார்மயமாக்கல்.
- சேர் பெறுமதி வரி 15% தனியொரு வீதத்துக்குக் கொண்டுவரப்பட்டமை.
- வட்டி வருமானத்தின் மீதான 10% தடுத்து வைத்தல் வரியின் கீழ் இருந்த வரி விடுவிப்பு எல்லை ஆண்டுக்கு ரூபா 72,000 இல் இருந்து ரூபா 108,000 வரை அதிகரிக்கப்பட்டமை.
- பற்று வரியின் மாதாந்த விடுவிப்புப் பற்றுத் தொகை ரூபா 20,000 ஆல் அதிகரிக்கப்பட்டமை.ஸ

**நிதியியல் துறையின் கொள்கை நடவடிக்கைகள்**

- வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கிக் கூறுகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் மற்றும் நிதிக் கம்பனிகளுக்கும் ஏற்புடையதான மூலதனப் போதுமை வீதத்தை 5% வீதத்துக்குக் குறையாத அடிப்படை மூலதனத்தைக் கொண்ட, இடர்நேர்வுக்கு ஏற்ப நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் மீது குறைந்தபட்சம் 10% வீத மூலதனப் போதுமை வீதமாக நிர்ணயித்தல்.
- முதனிலை வணிகர்களுக்கான மூலதனப் போதுமை வீதத்தை 3% இல் இருந்து 5% வீதம் வரை அதிகரித்தல். வெளிநாட்டு வங்கிகளுக்கான மூலதனப் போதுமை வீதமானது, அடிப்படை மூலதனத்தின் விளைவுச் சுழற்சியை நீடித்து முதிர்ச்சிக் காலத்தினுள் முறையே 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்துடனான திறைசேரி முறிகள் வெளியிடப்பட்டமை.
- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகளுக்கு (FCBUs) நியதித் திரவத் தன்மை வீதத்தை ஏற்புடையதாக்குதல்.
- அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை (RTGS) அறிமுகப்படுத்தப்பட்டமை.
- முதனிலை வணிகர்களுக்காக கனணித் திரைகளை அடிப்படையாகக் கொண்ட புளும்பர்க் முறிகள் வர்த்தக மூலத்தை அறிமுகப்படுத்துதல். அரச பிணையங்கள் வர்த்தகத்துக்குத் தேவையான அடிப்படைச் சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலே இதன் நோக்கமாகும்.

**வெளிநாட்டுத் துறையின் கொள்கை நடவடிக்கைகள்**

இலங்கைக்கான வறுமை ஒழிப்பு உபாய வழிமுறைகளின் கீழ் வழங்கப்படும் கடன் வசதியை (Poverty Reduction Strategy Credit - PRSC) உலக வங்கி அங்கீகரித்தல்.


இலங்கைக்கான வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி வசதி/பரவலாக்கப்பட்ட நிதியியல் வசதி (Poverty Reduction and Growth Facility - PRGF) சர்வதேச நாணய நிதியத்தால் அனுமதிக்கப்பட்டமை.

இலங்கையின் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தியின் பொருட்டான உதவி மாநாடு யப்பானின் டோக்கியோ நகரத்தில் நடைபெற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













# முக்கிய சமூகக் குறிகாட்டிகள்

## குடித்தொகையும் முக்கிய புள்ளிவிபரங்களும்.

| | |
|---|---|
| • 2003 இல் நடுவாண்டுக் குடித்தொகை (~000) | 19,252 |
| • வயதுப் பரம்பல் (~000) | |
| 0 ~ 14 வயது | 5,125 |
| 15 ~ 64 வயது | 12,894 |
| 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோர் | 1,233 |
| • குடித்தொகை அடர்த்தி (சதுர கிலோ மீற்றருக்கு ஆட்கள் ~ 2003) | 307 |
| • செப்பமற்ற பிறப்பு வீதம் (2002) குடித்தொகையில் 1000 க்கு | 19.1 |
| • செப்பமற்ற இறப்பு வீதம் (2002) குடித்தொகையில் 1000 க்கு | 5.8 |
| • இயற்கை அதிகரிப்பு வேகம் (2002) குடித்தொகையில் 1000 க்கு | 13.3 |
| • சிசு மரண வீதம் (2001) உயிருடனான பிறப்பு 1000 க்கு | 11.0 |
| • தங்கி வாழ்வோர் வீதம் (2001) | 49.3% |
| • சராசரி குடும்ப அளவு (2002) | 4.2 |
| • பிறப்பில் வாழ்நாள் எதிர்பார்ப்பு (1996/2001) | |
| ஆண் | 70.7 ஆண்டுகள் |
| பெண் | 75.4 ஆண்டுகள் |
| • கல்வி அறிவு வீதம் (1994) | |
| ஒட்டுமொத்தமாக | 90.1% |
| ஆண் | 92.5% |
| பெண் | 87.9% |
| • வருமானப் பரம்பல் | |
| கினிகுணகம் (2002) | 0.48 |
| • வறுமை | |
| நாளொன்றுக்கு 1 டொலருக்கும் கீழுள்ள குடித்தொகை (1995) | 6.6% |
| நாளொன்றுக்கு 2 டொலருக்கும் கீழுள்ள குடித்தொகை (1995) | 45.4% |
| சராசரி வருமானம் (2002) | மாதத்திற்கு ரூபா 13,038 |
| நடுத்தர வருமானம் (2002) | மாதத்திற்கு ரூபா 8,387 |
| நாளாந்தம் உட்கொள்ளும் கலோரி அளவு : | |
| 1990/91 2,105, 1995/96 2,104, 2002 2,120 | |
| வறிய குடியிருப்பாளர்களின் சதவீதம் | |
| 1990/91 30.4, 1995/96 26.7, 2002 23.9 | |
| • மனித அபிவிருத்திச் சுட்டெண் (2001) | 0.730 |
| 173 நாடுகளிடையே இலங்கையின் நிலை | 99 |
| • தொழில் நிலை | |
| தொழிலிலுள்ள ஆட்கள் (~000) (2003 மூன்றாவது காலாண்டு) | 6,973 |
| வேளாண்மை | 35.0% |
| கைத்தொழில் | 21.7% |
| பணிகள் | 43.3% |

கொழும்பு தமிழ்ச் சங்கம் நூலகம்

கொழும்பு ~ 13, 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தையிலமைந்துள்ள (ஆட்டுப்பட்டித்தெரு) கௌரி அச்சகத்தில் அச்சிடப்பட்டு இலங்கை மத்திய வங்கி தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org